# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 ● இதழ் 41 ● 21 நவம்பர் 1970 ● பக்கங்கள் 8 ● விலை சதம் 15


## மாசேதுங் சிந்தனை

உலகில் எல்லாப் புரட்சிகரப் போராட்டங்களும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் அதை ஸ்திரப்படுத்துவதிலுமே நோக்கம் கொண்டுள்ளன. எதிர்ப் புரட்சியாளர்களும் முற்றுமுழுதாக அவர்களின் அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டும் காரணங்களுக்காகவே புரட்சிகர சக்திகளுக்கு எதிராக வெறிகொண்டு போராடுகிருர்கள்.

# முக்கூட்டுதொழிற்சங்கங்களின் காட்டிக்கொடுப்பு

**முதலாளிமார் சம்மேளனத்துக்கும் முக்கூட்டணி கட்சிகளின் தலைமையிலுள்ள தொழிற் சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தின் நகல் அறிக்கையைப் பார்க்கும்போது, தொழிலாளி வர்க்கத்தின நலன்களை முக்கூட்டுத் தொழிற் சங்கங்கள் எந்தளவு தூரத்திற்கு காட்டிக் கொடுக்க முனைந்துள்ளன என்பதை தெளிவாக காணக் கூடியதாயுள்ளது. மாதம் 15 ருபா பிச்சைக் காசுக்காக தங்கள் உறுப்பினர்களின் கையையும் காலையும் கட்டி முதலாளிமார்களின் கையில் கொடுத்து விட்டிருக்கின்றன.**

இந்த ஒப்பந்தத்தின்படி, இந்தச் சங்கங்கள் எதுவுமோ, அல்லது அவற்றின் உறுப்பினர்களோ, முதலாளிமார் சம்மேளனத்திற்கெதிராக, அல்லது அதன் உறுப்பினராக உள்ள கம்பெனிகளுக்கு எதிராக வேலை நிறுத்தத்தில் இறங்க முடியாது. இன்னும் சொல்லப் போனுல் எந்த தொழில் தகராறு காரணமாகவும் - அது இதே ஒப்பந்தம் சம்பந்தப் பட்டதாயினும் சரியே - வேலை நிறுத்தத்திலோ அல்லது வேறு எந்த தொழிற்சங்க நடவடிக்கைகளிலோ ஈடுபட முடியாது.

குறிப்பாகச் சொல்லப் போனுல் இச் சங்கங்களின் உறுப்பினர்கள் நிச்சயமாக அடுத்த மூன்று வருடங்களுக்கு எதுவிதமான வேலைநிறுத்தப் போராட்டங்களிலும் ஈடுபட முடியாது. தொழிலாளர்களுடைய எந்தச் சங்கமாவது இந்த விதமாக தமது உறுப்பினர்களைக் கட்டிப்போட்ட சரித்திரமே இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை நினைவுக்குக் கொண்டுவர விரும்புகின்ருேம். அதாவது, தொழில் தகராறுகளைத் தீர்க்கும் வழிவகைகள் சம்பந்தமாக எமது சி. டி. யு. எப். பும் முதலாளிமார் சம்மேளனத்துடன் ஒரு கூட்டு ஒப்பந்தத்தைச் செய்தது. (கூட்டு ஒப்பந்தம் இல: 5-1958) இவ் ஒப்பந்தம், ஏழு நாள் முன்னறிவித்தலுடன் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை சி. டி. யு. எப். சங்கங்களுக்கு உறுதிப் படுத்தியுள்ளது.

. முக்கூட்டுக் கட்சி தொழிற் சங்கங்களுக்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்குமிடையே ஏற்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட ஒப்பந்தம், அதிகமாக கதையளக்கப்பட்ட மாதச் சம்பளம் பற்றி சிலவரையறைகளை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி ஒவ்வொரு கிழமையும் ஒவ்வொரு தொழிலாளியும் 28 மணித்தியாலமாவது (ஓவர் டைம் நீங்கலாக) வேலை செய்திருக்க வேண்டும். அல்லாவிடில் ஒரு நாள் கூலியை இழக்க நேரிடும். இந்த நாள் கூலி விகிதம் மாதச் சம்பளத்தைப் பிரித்து கணிக்கப்படும்.

வேலை இறுதிக் காலத்தில் சேமலாபநிதி (புரவிடன்ட் பண்ட்) இல்லாத தொழிலாளர்களுக்கு ஒவ்வோரு வருட சேவைக்கும் இரண்டு கிழமை ஊதியம் கொடுக்கப்படும். இது 1959ம் ஆண்டு மே முதலாம் திகதிக்குப் பின்வந்த முதல் கிழமையுடன் கணிக்கப் படும்.

இது விஷயமாக கடந்த ஆண்டு சினிமா அன்ட் பிலிம், ஸ்டுடியோ சங்கம் (சி. டி. யு. எப்.) பல சினிமாக்கம்பெனிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, இவ்வகையான, சேமலாப நிதி வசதிகளற்ற தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு வருடத்திற்கும் ஒரு மாத முழுச் சம்பளம் விகிதம் ஓய்வு கால நிதி அளிக்கப்பட வேண்டும் என்று ஏற்படுத்தியுள்ளது. இதைக் கணிப்பதற்கு தொழிலாளி ஓய்வு காலத்தில் பெறும் சம்பளமே கணக்கில் எடுத்துக் கொள்ளப் படும்.

மேலும், முக்கூட்டணி தொழிற் சங்கங்கள் தங்கள் ஒப்பந்தத்தின் மூலம், 55வயதுடன் தொழிலாளியை வேலையிலிருந்து நிறுத்தும் உரிமையை முதலாளிமாருக்கு அளித்துள்ளன. இதை சி. டி. யு. எப். பூரணமாக எதிர்த்து வந்துள்ளதால், சினிமாக் கம்பெனிகளுடன் சி. டி. யு. எப். செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தில் இது அனுமதிக்கப்படவில்லை.

முக்கூட்டணி தொழிற்சங்களின் கூட்டு ஒப்பந்தத்தை கவனத்துடன் படித்துப் பார்த்தால், தொழிலாளிவர்க்கத்தின் தனது ஐக்கியமின்மையாலும், தவருன சக்தியற்ற தலைமையை ஏற்றுக் கொண்டதாலும், புரட்சிகர நடைமுறைகளை கைவிட்டு சமாதான பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டதாலும் இன்று எதை எதையெல்லாம் இழந்து விட்டார்கள் என்பதையும், இத்தகைய கழுத்தறுப்புகளுக்கும், காட்டிக் கொடுப்புகளுக்கும் பலியாகும் நிலைக்கு ஆளாகி விட்டார்கள் என்பதையும் காண முடிகிறது. இவையெல்லாம் முக்கூட்டணித் தொழிற் சங்களின் அப்பட்டமான துரோகத்தனமான, பிழையான வழிகாட்டலைப் பின் பற்றிய தொழிலாளர்களின் கண்களை இப்போதாவது திறக்கச் செய்யும் என நம்புகின்ருேம்.

(இந்த ஒப்பந்தம் பற்றிய எமது ஏனைய குறிப்புக்கள் ''தொழிலாளி''யில் ஏற்கனவே வெளி வந்துள்ளன. — ஆர்)


## மகத்தான அல்பேனிய குடியரசின்
## 26வது ஆண்டு விழா

**நவம்பர் 29ந்திகதி மாலை 5 மணிக்கு**

**மாபெரும் பொதுக் கூட்டம்**

**கொழும்பு, தர்மபால மாவத்தையிலுள்ள**

செஞ்சிலுவை மண்டபத்தில்

நடைபெறும்

**இலங்கை - அல்பேனிய நட்புறவுச் சங்கம்.**

முகவரி: எண், 9, டிமெல் வீதி
கொழும்பு-2


# ஒரே மேடையில் இவர்கள்!

சேகுவேரா கும்பலின் (ஜனதா விமுக்தி பெரமுன) தலைவர் விஜய வீராவும் உள்ளூர் தி. மு. க. தலைவரும் இளஞ்செழியனுடன் ஒரே மேடையில் தோன்றிய விநோதமான காட்சி கடந்த போயா தினம் அட்டனில் நடந்தது. அட்டனில் உள்ள நோர்ட்டன் எனும் இடத்தில் நடந்த இக் கூட்டம் கினுகலை துப்பாக்கிப் பிரயோகத்துக்கு எதிராகநடத்தப்பட்டதாக கூறப்பட்டது.

இக் கூட்டத்தில் பேசிய மற்ருெருவர் பாலா தம்புவாகும். கூட்டத்தினர் தொகை 150 கூட இருக்காது. இக் கனவான்கள் எவருக்குமே தோட்டப் பகுதியில் எதுவித ஆதரவுமில்லை. ஆதலால் சொற்பமானேர் கூட்டத்தில் கலந்து கொண்டது குறித்து ஆச்சர்யப்படுவதற்கில்லை.

எனினும், நாம் கூற வந்த முக்கியமான விஷயம் இதுவல்ல. நாம் ஒரு முக்கிய கேள்வியை விடுக்க விரும்புகின்ருேம். இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களுக்கும் பிரதானமாக தி. மு. க, வுக்கும் எதிராக ரத்தம் உறைந்து போகக்கூடிய விதமாக பிரச்சாரம் நடத்திய உள்ளூர் சேகுவேரா கும்பல், தி. மு. க. தலைவருடன் ஒரே மேடையில் பேசியதுபற்றி என்ன விளக்கம் தரப்போகிருர்கள். சேகுவேரா கும்பல், தமது அரசியல் வகுப்புக்களில் இந்திய வம்சாவழி தோட்டத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்பாளர்களின் பகடைக் காய்கள் என வருணிக்கவில்லையா? சிங்கள மக்களைக் காப்பாற்றுவதற்காக தமிழ் ரத்தத்தில் நீந்தப்போவதாக அவர்கள் கூறவில்லையா? இப்படி இருந்தும் உள்ளூர் தி. மு. க. தலைவர்களுடன் ஒரே மேடையில் ஏற ஜனதா விமுக்தி பெரமுன தலைவருக்கு எப்படி முடிந்தது?

தி. மு. க. ஒரு அப்பட்டமான பிற்போக்கு வாத,

8- பக்கம் பார்க்க

# பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தில் பெரும் மோசடியா?

பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தில் ஊழல்களும் மோசடிகளும், அயோக்கியத்தனங்களும் நிறைந்துள்ளதாகப் பேச்சு அடிபடுகிறது. இது சம்பந்தமாக சில அரசியல் கட்சிகள் தங்கள் ஆட்சேபணையைத் தெரிவித்துள்ளன. ஏன், ஆளும் கும்பல் மத்தியிலும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல, ஆயிரக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகள் கூட இரண்டு தடவைகள் கல்வி அமைச்சரின் காரியாலயத்துக்கு முன்னால் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர்; தமது கண்டனத்தையும் தெரிவித்தனர்.

தேர்தல் காலத்தில் கூட்டாட்சி வாதிகள் வோட்டுப் பொறுக்குவதற்காக வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கொடுப்போம் என்று கூறினர். இந்த துரோகிகளை நம்பி வேலையற்ற பட்டதாரிகள் தங்கள் வாக்குகளைக் கொடுத்தனர். கூட்டாட்சிவாதிகளை ஆதரித்து தீவிரமாக தேர்தல் வேலைகளும் செய்தனர். கூட்டாட்சியினரின் வெற்றிக்கு வேலையற்ற பட்டதாரிகளின் ஆதரவும் ஒரு முக்கிய காரணமாகும்.

### நடந்தது என்ன?

அதிகாரத்துக்கு வந்தனர் கூட்டாட்சிவாதிகள். தங்கள் தேர்தல் வாக்குறுதிகளை காற்றில் பறக்க விட்டனர். பல்லாயிரக்கணக்கான பட்டதாரிகள் பல ஆண்டுகளாக வேலையற்று இருக்கின்றார்கள். ஆனால் 2,500 பேர்களுக்கு மட்டுந்தான் வேலை கொடுப்போம் என்று கூட்டாட்சியினர் விளம்பரம் செய்தனர். அரசாங்க வர்ததமானியில் விளம்பரம் செய்யப்பட்டது. விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பட்டதாரிகள் வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் விண்ணப்பம் அனுப்பினார்கள். நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. பல கஷ்டங்களுக்கு மத்தியிலும் பணம் செலவழித்து நேர்முகப் பரீட்சைக்குச் சென்றனர். பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சையும் முடிந்தது. ஆனால் நடந்தது என்ன?

நேர்முகப் பரீட்சை சகல பட்டதாரிகளுக்கும் மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. ஆனால் முதல் தடவையில் 200 பேருக்கு நியமனம் கொடுக்கப்பட்டது. பிறகு கொஞ்சப் பேருக்கு நியமனம் கொடுக்கப்பட்டது. இப்பொழுதும் சிலருக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றனவாம். 2500 பேருக்கும் ஏன் ஒரே தடவையில் நியமனம் கொடுக்கப்படவில்லை? நேர்முகப் பரீட்சை நடந்தது ஒரே தடவையில். அப்படியிருக்க நியமனங்கள் ஏன் பல தடவைகள் செய்யப்படுகின்றன? இது சந்தேகத்திற்கிடமான செயலல்லவா? அதுமாத்திரமல்ல, 2500 பேர்களுக்கும் நியமனங்கள் கொடுக்கப்பட்டுவிட்டதென்று ஏற்கனவே கல்வி அதிகாரிகள் கூறிவிட்டனர். ஆனால் இப்பொழுதும் நியமனக் கடிதங்

## எந்த அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டன?

கள் அனுப்பப்படுகின்றனவாம். அப்படியானால் 2500 பேருக்கும் மேலாக நியமனங்கள் கொடுக்கின்றார்களா? 2500 பேருக்கு நியமனங்கள் கொடுக்கப்பட்டுவிட்டது என்பதை எப்படி நம்புவது? அப்படி 2500 பேருக்கும் கொடுக்கப்பட்டுவிட்டால் அவர்களின் பெயர்ப்பட்டியலை கல்வி அமைச்சு பத்திரிகைகளில் வெளியிடலாமே? இதற்கு ஏன் கல்வி அமைச்சு தயங்குகிறது? இது கூடச் சந்தேகத்தைக் கிளப்புகிறதல்லவா?

### தாங்களே வழங்கியிருக்கலாமே?

நியமனங்கள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டன? தகமையின் அடிப்படையிலா? சித்தியடைந்த வருடத்தின் (சீனியோரிட்டி) அடிப்படையிலா? தொகுதிவாரியாகவா? அல்லது இன விதாரப்படியா? கொடுக்கப்பட்ட நியமனங்களைப் பார்க்கும்போது மேற்கூறிய எந்த அடிப்படையிலும் நியமனங்கள் வழங்கப்படவில்லை என தெரியவருகின்றது. மந்திரி மார்களதும், ஆளும் கும்பலதும், எம். பி. மார்களதும் பெயர்ப்பட்டியல்களின் அடிப்படையில் தான் நியமனங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவாம். மந்திரிமார்களும். எம். பி. மார்ர்களும் என்ன அடிப்படையில் பெயர்ப்பட்டியல்களைத் தயாரித்திருப்பார்கள்? அப்போ ஏன் அரசாங்க வர்த்தமானியில் விளம்பரம் செய்யப்பட்டது? ஏன் விண்ணப்பங்கள் கோரப்பட்டன? ஏன் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது? மந்திரிமார்களும், எம். பி. மார்களும் தாங்களே நேரடியாக நியமனத்தை வழங்கியிருக்கலாமே?

### வேலையிலிருப்போருக்கு வேலை

யு. என். பி. ஆட்சியின் போது அரசாங்க கூட்டுத்தாபன நியமனங்களில் ஊழலும், பாரபட்சமும், அநியாயமும் மலிந்திருந்தது என கூட்டாட்சிவாதிகள் ஓலமிட்டனர். தாங்கள் அதிகாரத்திற்கு வந்த உடனே யு. என். பி. ஆட்சியினால் தகாத முறையில் செய்யப்பட்ட நியமனங்களுக்கு எதிரான நடவடிக்கை என கூறி வேலையைப் பறித்துப் பலரை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் இப்போது இந்தக் கூட்டாட்சி கும்பல் என்ன செய்கிறது? ''மக்களாட்சி'' யில் என்ன நடக்கிறது?

வேலையற்ற பட்டதாரிகளுக்கா நியமனங்கள் கொடுக்கப்பட்டன? அப்படியென்றால் எத்தனை வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கப்பட்டது? சேவையிலிருந்த பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் கொடுக்கப்படவில்லையா? கூட்டாட்சிவாதிகள் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்கும் லட்சணத்தை இதோ பாருங்கள். பல்லாயிரக் கணக்கான பட்டதாரிகள் வேலையின்றி பல காலமாக அல்லல் படுகின்றனர். ஆனால் வேலையில் இருக்கும் பலரை கூட்டாட்சிவாதிகள் ஆசிரியர்களாக்கியுள்ளனர். இதை கூட்டாட்சிவாதிகளால் மறுக்க முடியுமா?

### ஒருவர் தற்கொலை

அரசாங்க எழுதுவினைஞர் சேவையிலுள்ள ஒருவர், குடிசன மதிப்பு புள்ளிவிபர இலாக்காவில் வேலை செய்கின்ற ஒருவர், கொழும்பிலுள்ள தனியார் துறை மகளிர் கல்லூரி

## 2500 பேருக்கும் வேலை அளிக்கப்பட்டதா?

யில் வேலை செய்கின்ற ஒருவர், இ. போ. ச. வில் வேலை பார்க்கின்ற கணவனும் மனைவியுமான இருவர், வாக்கர் அன் கிறீக் கம்பெனியில் வேலை செய்கின்ற ஒருவர், மத்திய வங்கியில் வேலை செய்கின்ற ஒருவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வேலை பார்க்கின்ற ஒருவர்—இதேபோல வேலையில் அமர்ந்துள்ள அநேகருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதே வேளையில், படித்துப் பட்டம் பெற்ற 26 வயதுடைய ஒரு வாலிபர் பல வருடங்களாக வேலையில்லாமலிருந்தார். தனக்கு வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையில் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றார். ''மக்களாட்சி'' யிலும் அவருக்கு வேலை கிடைக்கவில்லை. மனமுடைந்த அவர் தற்கொலை செய்து கொண்டார். இச் சம்பவம் கம்புறுப்பிட்டியாவிலுள்ள திஹாகொட எனும் இடத்தில் ஒக்டோபர் 31ந் திகதி நடந்துள்ளது.

இந் நிலையில், வடபிரதேசத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஆர். எஸ். தேவதாசனுக்கு அப்புத்தளையிலுள்ள ஒரு பாடசாலைக்கும் நுவரேலியாவிலுள்ள மற்றொரு பாடசாலைக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்ட இரண்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகப் பத்திரிகைச் செய்தி கூறியதையும் இங்கு எடுத்துக் காட்டவேண்டியுள்ளது. ஒரு நபருக்கு இரண்டு பாடசாலைகளில் ஆசிரியர் வேலை!

### கடதாசிப் புலியின் சீற்றம்

பட்டதாரி ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை முடிந்தபின் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபலமான உணவு விடுதியில் ஒரு நாள் இரவு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதாம். இந்த நேர்முகப் பரீட்சைக்கு 23 அழகான வேலையற்ற பட்டதாரி மங்கையர் அழைக்கப்பட்டனராம். இவர்களில் இரண்டு பேர் கூட்டாட்சிப் பிரமுகர்கள் இருவரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவ்விருவருக்கும் ஆசிரியர் வேலை அளிக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டதாம். இப்படி மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படுகிறது.

பட்டதாரி ஆசிரியர் நியமனத்தால் திரிபுவாதக் கோட்டைக்குள் பெரும் குத்து வெட்டுக்களும் கழுத்தறுப்புக்களும் நடந்ததாம். வடபிரதேசத்தில் தேர்தல் கேட்டு மண் கவ்விய ஒரு கடதாசிப் புலி, தான் கொடுத்த பட்டியலிலிருந்து ஒருவருக்குத்தானும் நியமனம் கிடைக்கவில்லை என்று பெரும் அட்டகாசம் செய்தாராம்.

ஆசிரிய நியமனங்களில் ஊழல்கள் நிறைந்திருக்கின்றன. தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டனர் என்று தமிழரசுக் கட்சியினர் ஒப்பாரி வைக்கின்றனர். நாங்கள் அவர்களை ஒன்று கேட்கிறோம். நீங்கள் கள்ளக் கூட்டுச் சேர்ந்திருந்த யு. என். பி. ஆட்சி காலத்தில் நடந்த நியமனங்களில் ஊழலும், பாரபட்சமும், அநீதியும் நடைபெறவில்லையா? இதற்கு நீங்கள் உடந்தையாக இருக்கவில்லையா? இதில் உங்களுக்குப் பங்கில்லையா? இப்போது ஏன் ஒப்பாரி வைக்கின்றீர்கள்? இந்த ஆட்சியில் நியமனங்கள் வழங்கப்படுவதில் உங்களுக்கு எலும்புத் துண்டுகள் கிடைக்கவில்லை என்ற வயிற்றெரிச்சலா?

### துரோகக் கும்பலால் முடியாது

தொழிலாளி வர்க்கத்தின் துரோகிகளும், சோஷலிசத்தின் விரோதிகளுமான திரிபுவாதி பீட்டர் கெனமனும், ட்ரொட்ஸ்கிய வாதிகளான ''தங்கமூளை'' என். எம். பெரேராவும், ''புரட்சிப்புலி'' கொல்வின் ஆர். டி சில்வாவும், 'சோஷலிஸப்'' பிரமுகர், பதியுதீன் மகமூதும் அமைச்சர்களாக இருக்கின்ற இந்தப் போலி மக்கள் அரசாங்கத்தினால் வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க முடியாது என்பதை வேலையற்ற பட்டதாரிகளும் ஏனையோரும் உணர்ந்து கொள்ள வேண்டும். வேலையற்ற பட்டதாரிகள் இந்தச் சந்தர்ப்பவாதிகளை நம்பி பிரயோசனமில்லை. அவர்களும் ஏனைய வாலிபர்களும் ஐக்கியப்பட்டு, தமது எதிர்காலத்தை தமது கையில் எடுத்துக் கொண்டு உறுதியுடன் போராடி, வாக்குப் பொறுக்கிகளின் பாராளுமன்ற ஆட்சி முறையைத் தகர்த்தெறிந்து தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவினால் தான் வேலையில்லாத் திண்டாட்டத்தை மாத்திரமல்ல, சகல பிரச்சினைகளையும் தீர்க்க முடியும். இதற்கு அனைவரும் தம்மைத் தயார்படுத்த வேண்டும்.

## வெலிஓயா குரூப் தொழிலாளர் வெற்றி

ஹட்டன் மாவட்டத்தைச் சேர்ந்த வெளிஓயா குரூப் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றியில் முடிந்தது. இக் குரூப்பைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமாக தொழிலாளர்கள் கடந்த மாதம் இரு வாரங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள். பெயர் பதியப்படாத நூற்றுக் கணக்கான பிள்ளைகளின் பெயர்கள் பதியப்பட்டு வேலை கொடுக்கப்பட வேண்டும் என்ற முக்கிய கோரிக்கையை முன்வைத்து இப் போராட்டம் நடைபெற்றது.

இக் கோரிக்கை சம்பந்தமாக உடனடியாக பேச்சுவார்த்தைக்கு நிர்வாகம் சம்மதித்ததால் வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. இதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இறுதியாக கடந்த 14ந் திகதி முதலாளிமார் சம்மேளனக் காரியாலயத்தில் நடைபெற்ற விசாரணையில் உடனடியாக 122 பிள்ளைகளின் பெயர்கள் பதிந்து வேலை கொடுக்க நிர்வாகம் இணங்கியது. மற்றப் பிள்ளைகள் சம்பந்தமாக அடுத்த ஜனவரிமாத முடிவுக்குள் பேச்சுவார்த்தை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது.

கடந்த மூன்று வருடங்களாக பெயர் பதிய நிர்வாகம் மறுத்து வந்தது. இதை எதிர்த்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்ததன் மூலமே இக் கோரிக்கையில் வெற்றிபெற முடிந்தது. இப் போராட்டத்தில் செங்கொடி சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும், மற்றும் சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஈடுபட்டிருந்தார்கள்.

# ஸ்ரீமாவின் சோஷலிஸம் ஒருவெத்துவேட்டு

சோஷலிஸம் என்ற சொல் எவ்வளவு தூரம் மக்களிடையே பிரபலமாயும், அவர்களைக் கவரக் கூடியதாயும் இருக்கிறதோ, அதே அளவு துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட வார்த்தையாகவும் அமைந்துவிட்டது. சோஷலிஸம் மக்களுடைய சிந்தனையைக் கவரக் கூடியதாக ஏற்பட்டு விட்டதால், மக்களை ஏமாற்ற முனைந்துள்ள எத்தர்கள் தாங்களும் சோஷலிஸவாதிகள் என்று வேஷம் போட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். உலகிலேயே முதலாவது சோஷலிஸ நாடான சோவியத் யூனியனை அழித்தொழிக்க சபதம் பூண்டுவந்த ஹிட்லர் கூட தனது கட்சியை தேசிய சோஷலிஸ கட்சி என்று அழைத்தது இங்கு நினைவுக்கு வருகிறது. இதே ''சோஷலிஸக் கட்சி'' யின் ஹிட்லர் தனது நாட்டில் செய்த முதல் வேலை, ஜெர்மனிய தொழிலாளர் இயக்கத்தை நசுக்கிநொருக்கியதுதான்.

எமது நாட்டிலும் கூட கடைந்தெடுத்த-கலப்படமற்ற பிற்போக்குவாதி கொத்தலாவலை கூட தன்னை ஒரு ஜனநாயக சோஷலிஸவாதி எனக் கூறி மாய்மாலம் பண்ணியதை நாடு மறக்கவில்லை. டட்லி சேனநாயக்காவும் தனது பிரதமர் பதவியின் இறுதிக் காலத்தில் யூகோஸ்லேவிய சோஷலிஸம் போற்றுதற்குரியது என்று புளுகியதையும் நாம் அறிவோம். ஆகவே, இன்று ஒவ்வொருவரும் - அவர் பெரிய நிலப்பிரபுத்துவவாதியாக இருந்தாலும் சரி, அல்லது பெரிய முதலாளித்துவவாதியாக இருந்தாலும் சரி - 'ஒரு' சோஷலிஸ்டே-தான்! சோஷலிஸம் என்ற வார்த்தைப் பிரயோகம் இன்று நாகரிகமாகக் கூட மாறிவிட்டது. ஆகவே, தம்மை சோஷலிஸவாதிகள் என்று அழைத்துக் கொள்வோர் எத்தனைபேர் உள்ளனரோ, அத்தனை விதமான வியாக்கியானங்களும் சோஷலிஸத்திற்குக் கூறப்பட்டுள்ளன.

### சோஷலிஸம் பற்றிய உண்மை

எனவேதான், சோஷலிஸத்திற்கு சரியான - விஞ்ஞான ரீதியான - விளக்கத்தை மக்கள் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமாகும். சோஷலிஸத்தின் பிதாக்களான மார்க்ஸுக்கும், எங்கெல்ஸுக்கும் கூட இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. ஆகவே, அவர்கள் தமது கொள்கையை, கற்பனாவாத சோஷலிஸத்திலிருந்து பிரித்து இனம் காட்டுவதற்காக ''விஞ்ஞான சோஷலிஸம்'' என்று அழைத்தார்கள். இன்றும் எமது நாட்டின் மிகப் பெரிய நிலப்பிரபுத்துவ குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவரும், பாராளுமன்றத்தில் தனது வாயினாலேயே தான் இலங்கையில் உள்ள மிகப் பெரிய பணக்காரர்களில் ஒருவர் என்று ஒப்புக்கொண்டவருமான பிரதமர் கூட எதுவித தயக்க மயக்கமுமின்றி தான் சோஷலிஸத்தை ஏற்றுக்கொண்டுள்ளதாக புளுகியுள்ளார். எனவே இச் சந்தர்ப்பத்தில் சோஷலிஸம் பற்றிய உண்மையான - தெளிவான விளக்கத்தை அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தம்மை ஒரு சோஷலிஸ்ட் என்று கூறிக் கொள்வதோடு மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கும் மேலாகச் சென்று, சோஷலிஸத்துக்கு

# சோஷலிஸம் என்றால் என்ன?

விளக்கம் கூறியுள்ளார். அதாவது, இ. போ. ச. தொழிலாளர் சபை எனக் கூறப்படும் சபைக் கூட்டமொன்றில் அம்மையார் பேசும் போது, கட்டுப் பாடாகவும் கடுமையாகவும் உழைப்பதுதான் சோஷலிஸம் என்று வியாக்கியானம் செய்துள்ளார். ஆனால், அம்மையார் இதனைக் கூறியது உண்மையில் முதலாளித்துவத்தின் பாற்பட்டதே. ஏனெனில் சகல முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள ஆளும் வர்க்கமான முதலாளிகள் இதையேதான் - அதாவது கடுமையாக வேலை செய், கட்டுப்பாட்டுடன் இரு - என்ற உபதேசத்தைத்தான் — தொழிலாளர்களுக்குப் போதித்து வருகிறார்கள். எந்த அமைப்பிலும் கடுமையான உழைப்பும் கட்டுப்பாடுமின்றி எதுவித முன்னேற்றமும் ஏற்படாது. ஆனால் கடுமையான உழைப்பும் கட்டுப்பாடும் சோஷலிஸத்தைக் கொண்டு வருமா?

ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி சோஷலிஸம் என்ற வார்த்தையைப் பற்றிக் குறிப்பிடுகையில், உற்பத்திசாதனங்களும், பரிவர்த்தனையும், விநியோகமும் தேசிய உடமையாகவும், அதன் கட்டுப்பாட்டிலும் இயங்குகின்ற அரசியல், பொருளாதார, சமூக அமைப்புபற்றிய ஒரு சித்தாந்தமாகும் என்று விளக்கம் கூறுகிறது. இந்த அகராதியின் விளக்கத்தில் கூறப்பட்டுள்ள அரசு என்பது அடக்கி ஒடுக்குகின்ற, சுரண்டுகின்ற முதலாளித்துவ அரசு அல்ல. தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் என மார்க்ஸினால் அழைக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசையே குறிப்பிடுவதாகும். இந்த தொழிலாளி வர்க்க அரசு பூர்ஷுவா அரசு இயந்திரத்தை முற்றுமுழுதாகத் தகர்த்தெறிவதன் மூலமே நிறுவப்பட முடியும் என்ற உண்மையை இவ்விடத்தில் மக்கள் அறிந்து கொள்வது அவசியமயமாகும்.

### திட்டமிட்ட தந்திரம்

இந்த விஞ்ஞான சோஷலிஸத்திற்கு எதிரான வாதங்கள் சோஷலிஸம் என்ற போர்வையில் உலாவ விடப்பட்டுள்ளது ஒரு புருடா மட்டுமல்ல, மக்களை ஏமாற்றுவதற்கு வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்டு வரும் தந்திரமாகும்.

பண்டாரநாயக்கா அம்மையாரை எடுத்துக்கொண்டால், அவர் ஆயிரக்கணக்கான ஏக்கர் மான்ய நிலங்களையும், ஆயிரக்கணக்கான ஏக்கர் தேயிலை, ரப்பர், தென்னந் தோட்டங்களையும் மற்றும் பல சொத்துக்களையும் உடையவர் இப்படிப்பட்ட பழைய நிலப்பிரபுத்துவ வம்சத்தைச் சேர்ந்த அம்மையார் தமது பெருந்தொகைச் சொத்துக்களின் மூலம் தமது தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் உழைப்பைச் சுரண்டவில்லையா? மக்கள் புரட்சியில் பொங்கியெழுந்து தனது சொத்துக்களைப் பறித்துக்கொள்ளாமல் இருப்பதற்காக தமது செல்வத்தின் ஒரு சிறு பகுதியை வரியாக இழக்கச் சம்மதித்துள்ள ஒரேயொரு காரணத்திற்காக அம்மையார் தன்னை ஒரு சோஷலிஸவாதி என்று அழைத்துக்கொள்வது கேலிக்குரியதாகும். இந்த விளக்கம் அம்மையாரின் மந்திரி சபையிலுள்ள ஏனைய அமைச்சர்களுக்கும் பொருந்தும். இவர்களில் பலருடைய செல்வம் அவர்களின் சுரண்டலின் அடிப்படையில்—அவர்களால் சுரண்டப்படும் பாட்டாளி மக்களின் உபரிமதிப்பின் அடிப்படையில்—பெறப்பட்டதாகும். இப்படிப்பட்டவர்களை சோஷலிஸவாதிகள் என்று அழைப்பது சோஷலிஸம் என்ற புனிதமான வார்த்தையை இழிவுபடுத்துவதாகவே அமையும்.

### முதலாளித்துவத்தின் தாரக மந்திரம்

சுரண்டும் வர்க்கங்களின் கரங்களிலிருந்து உற்பத்தி சாதனங்களை, சுரண்டப்படும் வர்க்கங்கள் புரட்சியின் மூலம் கைப்பற்றாமல் தடுப்பதற்காக, அவர்களின் முதுகில் தட்டிக் கொடுத்து தாஜா செய்ய வேண்டிய நிலை முதலாளி வர்க்கத்துக்கு ஏற்படுகிறது. இதற்காக அவர்கள் சில வாழ்க்கை வசதிகளை மக்களுக்கு அளிப்பதற்கு முன்வருவதுண்டு. இவற்றின் செலவுகளுக்காக பணக்காரர்களுக்கு சில வரிகளை விதிப்பதன் மூலம், தாம் மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே இவற்றைச் செய்வதாகக் காட்டிக் கொள்வது, முதலாளி வர்க்கத்தினுடைய ஏமாற்று வித்தைகளில் ஒன்று.

இந்த அடிப்படையில்தான் அண்மையில் இந்திய நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ வர்க்கங்களின் முன்னணிப் பிரதிநிதியாகிய திருமதி இந்திரா காந்தி, சொத்துடைமையாளர்கள் தமது சொத்தின் ஒரு பகுதியை சொத்தற்ற ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ளாவிடில், புரட்சி ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்று அர்த்தம் பொதிந்த கருத்தைத் தெரிவித்துள்ளார். ''உங்களின் செல்வத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அதனில் ஒரு சிறு பகுதியை விட்டுக் கொடுங்கள்'' என்னும் இக் கொள்கை முதலாளித்துவ தத்துவமாக என்றும் இருந்து வந்துள்ளது. ஆளும் வர்க்கத்தினரின் இந்த சுயபாதுகாப்பு சோஷலிஸமல்ல.

### நிதி அமைச்சரின் கூற்று ஒரு ஏமாற்று

முதலாளித்துவத்தின் முற்றுமுழுதான அழிவிலிருந்துதான் சோஷலிஸத்தை நிறுவ முடியுமென்பதை ஒவ்வொருவரும் தெளிவாகக் கிரகித்துக் கொள்ளவேண்டும். சோஷலிஸம் என்பது தொழிலாளி வர்க்க அரசின் கையில் உற்பத்தி சாதனங்களும், பரிவர்த்தனையும், விநியோகமும் இருப்பதைக் குறிக்கும். இந்த நிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளதா? அல்லது அந்த நிலையை ஏற்படுத்தும் பாதையில் ஒரு அடிதானும் எடுத்துவைக்க முக்கூட்டணி அரசாங்கம் எண்ணியதுண்டா? முக்கூட்டணியின் தேர்தல் அறிக்கையின் பின்னணியில் தனது வரவு—செலவு திட்டப் பிரசங்கத்தை ஆழமாகப் படிக்குமாறு நிதி அமைச்சர் கூறிய போதிலும், சோஷலிஸத்தை நோக்கி இந்த அரசாங்கம் ஒரு அடியாவது எடுத்துவைக்க எண்ணியுள்ளது என்பதை அவரின் பிரசங்கத்திலிருந்து அறிந்துகொள்ள முடியவில்லை.

எமது பொருளாதாரத்தின் கேந்திரங்கள் தனியார் துறையிலிருந்து அரசாங்கத் துறைக்கு மாற்றமடையும் என்று நிதி அமைச்சர் மேலும் புளுகியுள்ளார். ஆனால், நாம் அடிக்கடி குறிப்பிட்டு வந்துள்ளது போல், எமது பொருளாதாரத்தின் கேந்திரங்கள் இன்று அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் பிடியில் உள்ளன. ஆனால், நிதி அமைச்சரின் வரவு—செலவு திட்டப் பிரசங்கத்திலோ அல்லது முக்கூட்டணியின் தேர்தல் அறிக்கையிலோ இப் பிடிப்பில் மாற்றம் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக்கூட ஒரு வார்த்தையும் காணோம். உண்மையில் கூறப்போனால், இலங்கையில் ஏகாதிபத்தியவாதிகள் அனுபவித்துவரும் நலன்களுக்கு எதிராக 1964ல் சில தடைகள் விதிக்கப்பட்டன. உதாரணமாக, அந்நிய வங்கிகளின் செயல்பாட்டுக்கு விதிக்கப்பட்ட தடைகள்; இலங்கையிலிருந்து லாபங்களை வெளியே கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட தடைகள் ஆகியன இன்று முற்று முழுதாகக் கைவிடப்பட்டுள்ளன.

### கைவைக்க விரும்பவில்லை

அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையுமே எடுக்க முடியாத நிலையில் இந்த அரசாங்கம் இருப்பதற்கான காரணங்களை எவரும் புரிந்து கொள்ளக் கூடியதே. முன்னைய யு. என். பி. அரசாங்கம் செயல்பட்ட அதே பொருளாதார அமைப்புக்குள் இருந்து கொண்டு முக்கூட்டணி அரசாங்கமும் ஏகாதிபத்தியவாதிகளின் ஆதிக்கத்திலுள்ள உலக வங்கியிடம் கடன் பெறுவதற்கு முயன்று வருகிறது. எனவே, இந்த அரசாங்கம் தனது பாதுகாவலர்களான ஏகாதிபத்தியவாதிகளின் அதிருப்தியைப் பெற விரும்பவில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை அந்நிய ஏகாதிபத்தியத் தளைகளிலிருந்து விடுவிக்க வேண்டிய அடிப்படையான முதல் நடவடிக்கையைக்கூட எடுக்க முடியாமலிருக்கும் அதே வேளையில் சோஷலிஸத்தைப்பற்றி வாய்ப்பந்தல் போடுவது மக்களின் கண்களில் மண் தூவும் முயற்சியேயாகும்.

இங்கு, நாம் சோஷலிஸத்தைப்பற்றி கூறிய விளக்கங்களை வைத்துக்கொண்டு, இன்று சோஷலிஸப் புரட்சியின் காலகட்டத்தை அடைந்துவிட்டோம் என நாம் கருதுவதாகவோ அல்லது சோஷலிஸமே இன்றைய கட்டம் என்றோ யாரும் எண்ணக் கூடாது. உண்மையில், நாம் இன்னும் புரட்சியின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கட்டங்களைத் தாண்டவில்லை. இவற்றை நிறைவேற்றாமல் சோஷலிஸத்தைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருப்பது வீண் பொழுதுபோக்காகும்.

### புரிந்துகொண்டு பேசட்டும்

அந்நிய ஏகாதிபத்தியமும், நிலப்பிரபுத்துவமும், தரகு முதலாளித்துவமும் எமது பிரதான முதல் எதிரி என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே, அந்நிய ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ தளைகளிலிருந்து இந் நாட்டை விடுவிப்பதே எமது உடனடி நோக்கமாகும். இப் பொது எதிரிக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் ஐக்கியப்படுத்தக்கூடிய சகல முற்போக்கு சக்திகளையும் ஓரணியில் ஐக்கியப்படுத்தல் வேண்டும். பொது எதிரியை வீழ்த்துவதற்கு புரட்சிகர நடைமுறைகளை கையாள வேண்டும். முன்னேறிச் செல்வதற்கு இது ஒன்றே சரியான வழி. இந்த மிக முக்கியமான கடமைகளை நிறைவேற்றாமல் சோஷலிஸத்தைப் பற்றி பிதற்றிக் கொண்டிருப்பது மக்களின் கவனத்தை இந்த உடனடிக் கடமைகளிலிருந்து திசை திருப்புவதற்கேயாகும். சோஷலிஸத்தைப்பற்றி அதிகம் பேசுபவர்கள் தாங்கள் என்ன கூறுகிறோம் என்பதை புரிந்துகொண்டு பேசட்டும்.

# அரசியல் என்றால் என்ன?

## மாசேதுங் சிந்தனை கூறும் விளக்கம்

நமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி அதன் உறுப்பினர் அனைவரையும், அது தலைமை தாங்கும் தொழிற் சங்கம், வாலிபர் சங்கம் போன்ற வெகுஜன ஸ்தாபனங்களையும் மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனையால் ஆயுதபாணிகளாக்க வேண்டும், அரசியல் மயப்படுத்த வேண்டும் என எப்பொழுதும் கூறி வருகின்றது. அதற்காக சர்வ சதா' உழைத்தும் வருகின்றது.

அப்படியாயின் ''அரசியல் என்றால் என்ன?'' என்பதை நாம் முதலில் அறிந்து கொள்வது அவசியம்.

உலகப்புரட்சியின் மீகாமன், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர் தோழர் மாசேதுங் அவர்கள் நமக்குப் போதித்துள்ளதாவது:-

''அரசியல் என்பது, அது புரட்சி அரசியலாயிருந்தாலும் சரி, எதிர்ப்புரட்சி அரசியலாருந்தாலும் சரி, ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்துக்கு எதிராக நடத்தும் போராட்டம்; ஒரு சில தனிநபர்களின் நடவடிக்கை அல்ல.''

### வர்க்கப் போராட்டம்

அதாவது, மாசேதுங் சிந்தனையின் பிரகாரம், அரசியல் என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்துக்கு எதிராக நடத்தும் போராட்டமாகும்.

முதலாளித்துவ அரசியல் என்பது முதலாளி வர்க்கம் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக நடத்தும் போராட்டம் ஆகும்.

நிலப்பிரபுத்துவ அரசியல், அடிமைச் சொந்தக்காரர்களின் அரசியல் என்பது நிலப்பிரபுக்களும், அடிமைச் சொந்தக்காரர்களும், பண்ணை விவசாயிகளுக்கும், அடிமைகளுக்கும் எதிராக நடத்தும் போராட்டம் ஆகும்.

இவை எல்லாம் பிற்போக்கு அரசியல், எதிர்ப்புரட்சி அரசியல் என்று மார்க்சிஸம் கூறுகின்றது. இந்த அரசியலை எல்லாம் நாம் எதிர்க்கின்றோம்.

பாட்டாளி வர்க்க அரசியல் என்பது தொழிலாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக நடத்தும் போராட்டமாகும்.

இது முற்போக்கு அரசியல், புரட்சிகர அரசியல் ஆகும். அதுபோல, விவசாயிகளும், அடிமைகளும் நிலச்சுவாந்தார்களுக்கும் ஆண்டான்களுக்கும் எதிராக நடத்தும் போராட்டங்கள் எல்லாம் புரட்சிகர அரசியலின் ரகத்தைச் சேர்ந்தவை. நாம் இத்தகைய புரட்சிப் போராட்டங்களை ஆதரிக்கின்றோம்; இத்தகைய புரட்சி அரசியலில் பங்கு பற்றுகின்றோம்;

### மாசேதுங் சிந்தனையை கிரகித்துக்கொள்ள வேண்டும்

நாம் அனைவரும் மாசேதுங் சிந்தனையைக் கிரகித்துக் கொண்டால், பாட்டாளி வர்க்க அரசியலுக்கும், முதலாளித்துவ அரசியலுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ள முடியும். புரட்சி அரசியலுக்கும் எதிர்ப் புரட்சி அரசியலுக்கும் உள்ள வித்தியாசத்தை தெரிந்து கொள்ள முடியும். மாசேதுங் சிந்தனையால் நம்மை ஆயுதபாணிகளாக்கிக் கொண்டால், தேசிய ரீதியில் ஆளும் வர்க்கங்கள் ஆளப்படும் வர்க்கங்களுக்கு எதிராக நடத்தும் போராட்டங்களையும், சுரண்டப்படும் வர்க்கங்கள் சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக நடத்தும் போராட்டங்களையும் வித்தியாசப்படுத்திக் கொள்ள முடியும். சர்வதேசிய ரீதியில், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகள் வியட்நாம் போன்ற நாடுகளுக்கு எதிராக நடத்தும் போராட்டங்களையும், அடக்கி ஒடுக்கப்படும் நாடுகள் அடக்கி ஒடுக்கும் நாடுகளுக்கு எதிராக நடத்தும் போராட்டங்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியும். அவை எந்த ரக அரசியலை சேர்ந்தவை என்றும் இனங் கண்டு கொள்ள முடியும். அவற்றின் தன்மையை அறிந்து, அவற்றை ஆதரிக்கவும், எதிர்க்கவும் முடியும்; பங்குபற்றவும் பகிஷ்கரிக்கவும் முடியும்.

### அரசியலின் நோக்கம் என்ன?

இந்த அரசியலின் நோக்கம் யாது? இந்த வர்க்கப் போராட்டம் எதற்காக நடைபெறுகின்றது?

புரட்சி மேதை லெனின் அவர்கள் கூறியது போல ''அரசியல் என்பது பொருளாதாரத்தின் செறிந்த வெளிப்பாடாகும்.''

முதலாளித்துவ அரசியல் என்பது முதலாளித்துவ பொருளாதாரத்தின் செறிந்த வெளிப்பாடு; முதலாளிகள் தொழிலாளர்களுக்கும் உழைப்பாளி மக்களுக்கும் எதிராக நடத்தும் ஒரு வர்க்கப் போராட்டம்.

பாட்டாளி வர்க்க அரசியல் என்பது தொழிலாளி வர்க்கத்தினதும் உழைப்பாளி வெகுஜனங்களினதும் பொருளாதார நலன்களைப் பிரதிபலிக்கும் ஒரு வெளிப்பாடு; தொழிலாளர்களும் உழைப்பாளி மக்களும் முதலாளிகளுக்கும் சுரண்டல்காரர்களுக்கும் எதிராக நடத்தும் ஒரு வர்க்கப் போராட்டம்.

வர்க்க சமுதாயத்தில் காணும் ஒவ்வொரு அரசியல் அதிகாரமும் ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் சமூக பொருளாதார அமைப்பை, நலன்களை பாதுகாப்பதற்காக திட்டமிட்டு அமைக்கப்பட்டது.

முதலாளித்துவ அரசியல் அதிகாரம் முதலாளித்துவ சமூக பொருளாதார அமைப்பை பாதுகாத்து வளர்ப்பதற்காகத் திட்டமிடப்பட்டது. அமெரிக்க அரசியல் அதிகாரம் அமெரிக்காவின் முதலாளித்துவ ஏகபோக கும்பல்களின் ஏகாதிபத்திய பொருளாதார நலன்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக அமைக்கப்பட்டது. இலங்கை அரசியல் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, தோட்டச் சொந்தக்கார வர்க்கங்களின் பொருளாதார நலன்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்டது.

சோஷலிஸ சீனாவிலும், ஐரோப்பாவில் சோஷலிஸ கலங்கரை விளக்காகத் திகழும் அல்பேனியாவிலும் நாம் காண்பது முதலாளித்துவ அரசியல் அல்ல; அங்கு நிலவுவது பாட்டாளி வர்க்க அரசியல் அதிகாரம், , பாட்டாளி வர்க்கத்தினதும் இதர உழைப்பாளி மக்களினதும் பொருளாதார நலன்களை, ஆசை அபிலாசைகளை பேணிக்காத்து, ஸ்திரப்படுத்தி வளர்த்து விஸ்தரிப்பதற்காக சீனாவிலும், அல்பேனியாவிலும் பாட்டாளி வர்க்க அரசியல் அதிகாரம் ஸ்தாபிக்கப்பட்டது.

நமது நாட்டில் கூட, தொழிலாளர்களும் விவசாயிகளும், புரட்சிகரப் புத்திஜீவிகளும், இதர உழைப்பாளி மக்களும் தமது பொருளாதார நலன்களையும் உரிமைகளையும் பெற்றுப் பாதுகாத்து, விஸ்தரிக்க விரும்பினால், உள்நாட்டு வெளிநாட்டு சுரண்டும் வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாக்கும் பிற்போக்கு அரசாங்க யந்திரத்தை உடைத்தெறிந்துவிட்டு, அதன் அழிவு மேட்டில் பாட்டாளி வர்க்க குடியரசு ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும்.

### முதலாளித்துவ அதிகாரம், பாட்டாளி வர்க்க அதிகாரம் இரண்டுக்கும் உள்ள வேற்றுமை என்ன?

முதலாளித்துவ அரசு அதிகாரம் என்பது சமுதாயத்தில் அற்ப பகுதியாக விளங்கும் முதலாளித்துவ சுரண்டும் வர்க்கங்கள் தங்கள் சுரண்டலை தடையின்றி நடத்தவும், தட்டிக் கேட்பவர்களை மட்டம் தட்டி நசுக்கவும் அமைந்துள்ள அரசாகும். இதற்காக சுரண்டும் வர்க்கங்கள் இராணுவம், பொலிஸ், சட்டம், கோடுகள், சிறைச்சாலை, கலாசாலை, கலாச்சாரம் முதலியனவற்றை சிருஷ்டித்துள்ளன. முதலாளித்துவ அரசாங்க அமைப்பு உருவத்தில் பல்வேறு விதமாக இருக்கலாம். ஜனநாயக ஆட்சியாக, அல்லது குடியரசாக இருக்கலாம். முடியரசுடன் கூடிய பாராளுமன்ற அரசாக அல்லது பாராளுமன்றத்துடன் கூடிய குடியரசாக இருக்கலாம். ஆனால் உள்ளடக்கத்தில் அவை எல்லாம் முதலாளிகள் தொழிலாளிகளைச் சுரண்டுகின்ற சிறுபான்மைச் சுரண்டும் வர்க்கங்கள் ஏகப்பெரும்பான்மையான உழைப்பாளி மக்களை அடக்கி ஒடுக்குகின்ற முதலாளித்துவ சர்வாதிகாரமாகும். அங்கு காணும் ஜனநாயகம், சுதந்திரம் போன்றவை எல்லாம் ஆளும் வர்க்கங்கள் அனுபவிக்கும் சுதந்திரம், ஜனநாயகம் அன்றிவேறல்ல. நமது நாடான இலங்கையில் முதலாளிகள், நிலப்பிரபுக்கள், தோட்டச் சொந்தக்காரர்களுக்கு மட்டும் ஜனநாயகமும் சுதந்திரமும் உண்டு. பொது மக்களுக்கு சர்வாதிகாரமே உண்டு. உதாரணமாக, இங்கு முதலாளிகளுக்கு தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுக்கச் சுதந்திரம் உண்டு. ஆனால் சுரண்டப் படாமல் வாழ்வதற்கு தொழிலாளி வர்க்கத்துக்கும் உழைப்பாளி மக்களுக்கும் சுதந்திரம் இல்லை. சுரண்டும் வர்க்கங்களுக்கு சுகபோகம் அனைத்தும் உண்டு. பாட்டாளிகளுக்கு பஞ்சமும் பட்டினியும் பலவகை துன்பங்களும் மட்டும் உண்டு.

மறுபுறம் பாட்டாளி வர்க்க அதிகாரம் என்பது தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளி மக்களும் தமது வர்க்க நலன்களைப் பாதுகாத்து, விஸ்தரிப்பதற்காக, சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக போராட்டம் நடத்துவதற்குரிய கருவியாகும். இது மக்கள் ஜனநாயக சர்வதிகாரம் என்றும் அழைக்கப்படும். இங்கு மக்களுக்கு சகலவிதமான ஜனநாயக உரிமைகளும் உண்டு. ஆனால் உழைப்பாளி மக்களை உறிஞ்சிக் குடித்த சுரண்டும் வர்க்கங்களுக்குசர்வாதிகாரம் மட்டுமே கோலோச்சும்.

### ஆயுதமேந்தி நிற்கும் வர்க்கம்

ஒவ்வொரு வர்க்க சமுதாயத்திலும் ஆளும் வர்க்கங்கள் ஆளப்படும் வர்க்கங்களுக்கெதிராக ஆயுதமேந்தியே நிற்கும். முதலாளித்துவ நாட்டில் சுரண்டும் வர்க்கங்கள் உழைப்பாளி மக்களுக்கு எதிராக ஆயுதமேந்தியே நிற்கின்றன. அவற்றால் மக்களுடைய போராட்டங்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கின்றன. 1947 - பொது வேலை நிறுத்தம் முதல் 1969 மே தினப் போராட்டம் வரையான பெரும் போராட்டங்கள் அனைத்திற்கும் எதிரிகள் ஆளும் வர்க்கங்கள் தமது ஆயுதப் படைகளையும் பொலிஸாரையும் ஏவி விடவில்லையா?

''யார் அரசாங்க அதிகாரத்தைக் கைப்பற்றி நிலை நிறுத்த விரும்பினாலும், அவர் பலமான படை ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்'' என்று மாசேதுங் சிந்தனை நமக்குப் போதிக்கின்றது.

வரலாற்றில் கண்ட அடிமைச் சொந்தக்காரர், நிலப்பிரபுக்கள், முதலாளிகள் ஆகிய முப்பெரும் வர்க்கங்களும் தமது பொருளாதார நலன்களையும், இதர உரிமைகளையும் பெறுவதற்கும், பேணிக்காப்பதற்கும், பெருக்குவதற்கும், முதன் முதலில் பலமான படைகளைப் பெற்று, அவற்றின் மூலம், எதிரி வர்க்கங்களிடமிருந்து அரசியல் அதிகாரத்தையே கைப்பற்றின என்பதை உலக அரசியல், வர்க்கப் போராட்ட வரலாறு முழுவதும் நமக்கு காட்டுகின்றது. மார்க்சிஸம் - லெனினிஸம்—மாசேதுங் சிந்தனையும் நமக்கு இதையே போதிக்கின்றது.

இலங்கைப் பாட்டாளி வர்க்கப் மாத்திரமல்ல, இதர உழைப்பாளி மக்களும், அதுபோல அடக்கி ஒடுக்கப்பட்ட உலக மக்களும், தேசங்களும், மனிதனை மனிதன் விழுங்கும் இன்றைய முதலாளித்துவ நரகத்திலிருந்து வெளியேறி, சோஷலிஸ, கம்யூனிஸ சுவர்க்கத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் முதல் முதலில் மார்க்சிஸம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனையால் தம்மை ஆயுதபாணிகள் ஆக்கிக் கொள்வது, தம்மை அரசியல் மயப்படுத்துவது அவசியம்.

''பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தை வெற்றி கொள்ள விரும்பினால், அதன் சொந்த, பாட்டாளி வர்க்க அரசியல்வாதிகளைப் பயிற்ற வேண்டும்.'' —லெனின்

வர்க்கத்தின் தேவைகளும், பொது மக்களின் தேவைகளும் அரசியல் மூலம்தான் செறிந்து வெளிப்பட முடியும்,''

- மாசேதுங்

---

## அங்கீகாரம்

மக்கள் சீன குடியரசை கனடா அங்கீகரித்துள்ளதை சென்றவாரம் குறிப்பிட்டிருந்தோம். இப்போது இத்தாலி, ஈக்குவடோர், கினியா ஆகியவையும் அங்கீகரித்துள்ளன. ஆஸ்திரியா, பெல்ஜியம் அங்கீகாரத்துக்கான பேச்சு வார்த்தை நடத்துகிறது.

பெல்ஜியமும், ஒல்லாந்தும் சோஷலிஸ அல்பேனியாவை அங்கீகரித்துள்ளன.

நம்மைச் சுற்றி > நவம்

# மாடி வீடுகள் யாருக்கு?

சேரிகள் ஒழிப்பது பற்றியும் குறைந்த செலவில் வீடுகள் கட்டுவது பற்றியும் கூறித் திரிந்த திரிபுவாத மந்திரி கெனமன் இந்தியா சென்று வந்ததும் சிறிது ஓய்ந்திருந்தார். காரணம், அவர் இந்தியா சென்றிருந்த போது இரு ''பெரும் உண்மைகளை'' அறிந்தாராம். ஒன்று வீடுகள் கட்டுவதற்குப் பணம் தேவை; மற்றது இந்தியாவில் வீட்டுப் பிரச்சினை இலங்கையை விட மோசம்!

அண்மையில் சேரி ஒழிப்பையும், குறைந்த செலவில் வீடுகள் கட்டுவதையும் பின் தள்ளிவிட்டு மாடி வீடுகள் கட்டுவதுபற்றி செய்தி அடிபடுகின்றது. பம்பலப்பிட்டியில் ஒரு மாடி வீடு. அதில் 44 பிரிவுகள். ஒவ்வொரு பிரிவும் 600 சதுர அடி கொண்டது. 25 லட்சம் ரூபாய். அதாவது ஒரு சதுர அடிக்கு கிட்டத்தட்ட 100 ரூபா செலவாகும். நடுத்தர வர்க்கத்தினர் கட்டும் வீடுகள் சதாரணமாக சதுர அடிக்கு 25 ரூபா செலவாகும். எனவே கெனமனின் மாடிவீடு யாருக்காகத் திட்டமிடப்படுகிறதோ என்ற கேள்வி எழுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பேஜோ கார்கள் மட்டும் போதாது, நவீன மாளிகைகளும் வேண்டுமென்பதை உணர்ந்துள்ளார் போலத் தெரிகிறது. யு. என். பி. காலத்தில் சாதாரண எம். பி. யாக இருந்து மாளிகை கட்டின நிபுணரல்லவா இவர்?

பாராளுமன்றத்திற்கும் புதிய கட்டிடம் அமைப்பதற்கு திட்டமிடப்படுகின்றது. இதற்கான ஒரு 'மாதிரிக் கட்டிடம்' கெனமனின் அமைச்சு அலுவலகத்தில் இருக்கின்றது. இதற்கு எத்தனைகோடி செலவாகுமோ தெரியாது.

பாராளுமன்றத்தின் மூலம் சோஷலிஸத்தை அடைவதுதான் தனது கட்சியின் கொள்கை என்று திரிபுவாதி மெண்டிஸ் அண்மையில் கூறியுள்ளார். எனவே திரிபுவாத மந்திரியும் பாராளுமன்றத்திற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் சேவை செய்வதில் அக்கறை செலுத்துகிறார் போலும்!

தங்க மூளை என். எம். பெரேரா எம். பி. மாருக்கு பென்ஷன் கொடுக்கும் தனது திட்டத்தை அமுல் நடத்த வேண்டியதுதான் பாக்கி.

சென்ற தேர்தலில் மக்கள் கொடுத்த தீர்ப்பு பாராளுமன்ற முறைக்கான ''இறுதி சான்ஸ்'' எனகருதப்படுகிறது. எனவே. என். எம். பெரேராவின் பென்ஷன் திட்டம் வந்தாலும் வராவிட்டாலும் சரி, மக்கள் பாராளுமன்ற முறைக்கே விரைவில் பென்ஷன் கொடுப்பது நிச்சயம்.

★

## விலைக்கட்டுப்பாடு

சவர்க்காரம், பற்பசை போன்ற சில பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாடு கசெற்றில் விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவற்றின் அளவையோ அல்லது தரத்தையோ பற்றி ஒரு விதக் கட்டுப்பாடும் இல்லை. விலை எவ்வளவுக்கு குறைக்கப்பட்டுள்ளதோ அதில் பார்க்க கூடிய விகிதத்தில் அளவைக் குறைப்பதன் மூலம் முதலாளிமார் தமது இலாபத்தைக் கூட்டியுள்ளனர்.

சேட்டுக்களுக்கு கூடிய விலையும் குறைந்த விலையும் விதிக்கப்பட்டுள்ளது. குறைந்தவிலை 12 ரூபா எனவும், கூடிய விலை 23 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டது. 23 ரூபாவிற்கும் கூடுதலாக விற்கப்பட்ட சேட்டுகள் கறுப்புச்சந்தைக்கு சென்றுவிட்டன. ஆனால் 12 ரூபாவிற்கும் குறைவாக விற்கப்பட்ட சேட்டுக்கள் விலைக்கட்டுப்பாட்டுக்குப் பின் 12 ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளன.

ஒருபொருளின் விலை, அளவு, தரம் என்பவற்றில் தங்கியிருக்கிறது என்பது எவருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் இது கைத்தொழில் அமைச்சிலுள்ள பண்டிதர்களுக்குப் புலனாகவில்லை. இவர்களின் விலைக்கட்டுப்பாடுகளினால் முதலாளிகளின் லாபம்தான் கூடியுள்ளது.

இதுதான் பாராளுமன்ற சோஷலிஸத்தின் உத்தியோக வகுப்பினரின் ஆட்சி.

★

## மக்கள் படை

மக்கள் பெற்ற வெற்றிகளை நிலைநாட்டுவதற்கு மக்கள் படை ஒன்று வேண்டும் என்று பட்ஜட் விவாதத்தின் போது கிரியெல்ல எம். பி. திரு. வாசுதேவ நாணயக்காரா கூறியதாகபத்திரிகைகளில்குறிப்பிட்டிருந்தது. மக்கள் என்ன வெற்றிகளைப் பெற்றுள்ளார்கள் என்பதை அவர் கூறவில்லை. ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டல் தொடர்ந்து நடைபெறுகிறது. அதேநேரத்தில் எம். பி.மார்களுக்கு கார்களும், வீடுகளும், பென்ஷனும் கூட காத்துக் கொண்டிருக்கின்றன. மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும், ரொக்கட் வேகத்தில் செல்லும் வாழ்க்கைச் செலவும்தான் சொந்தம், இவற்றைப்பாதுகாப்பதற்குத்தானே பொலிஸ் மற்றும் முப்படையினரெல்லாம் இருக்கின்றனர். போதாக்குறைக்கு 600. புதிய பொலிஸ்காரர்களை எடுக்கப் போகின்றார்களாம். வாசுதேவ நாணயக்காரா, நந்தா எல்லாவெல போன்றோர் என்னதான் கத்தித்திரிந்த போதிலும் அரசு இயந்திரத்தைப் பலப்படுத்தும் வேலைகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. சென்ற வாரம் குறிப்பிட்டதுபோல ஏகாதிபத்திய நாடுகளில் பயிற்சியளிப்பதுடன், அரசு இயந்திரத்தின் வேலையைச் சுலபமாக்குவதற்கு கலை இலக்கியத்தையும் பாவிக்கப் போகிறார்களாம். பொலிஸார் இனிப் பாட்டுப் பாடிக் கொண்டு சுடுவார்களாக்கும்.

வாசுதேவ நாணயக்காராவினது மக்கள் படை இலங்கரத்தின கூறியதுபோல ஸ்ரீ லங்கா சுதந்திர பொலிஸ், இராணுவம் என்றுபெயர் மாற்றுவதில் முடியக் கூடும். ஆனால் ஏகாதிபத்தியத்தையும் அதை பாதுகாக்கும் அரசு இயந்தரத்தையும் தூக்கி யெறிவதற்கு மக்களுக்கு மக்கள் படை ஒன்று அவசியம்.

★

## எம், பி. மாரும் புதிய கார்களும்

நாட்டின் நலனுக்காகச் சிக்கனமாயிருங்கள், தியாகம் செய்யுங்கள் என்று நிதியமைச்சர் என். எம். பெரேரா மக்களுக்குப் போதிக்கின்றார். அதே வேளையில், அவர் நிதியமைச்சராக இருக்கும் அரசாங்கத்தின் எம். பி. மார்களுக்கு புதிய பிரெஞ்சுக் கார்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்கிறாராம்! அக் கார்கள் ஒவ்வொன்றின் விலை ரூபா. 25,177/- அல்லது ரூ. 28,766, அல்லது ரூ. 31,081 ஆகும்.

யு. என். பி. ஆட்சிக் காலத்தில் பாராளுமன்றத்திற்கு போட்டியிடும் அபேட்சகர்களுக்கு புதிய கார்கள் இறக்குமதி செய்வது சம்பந்தமாக ஜே. ஆர், ஜெயவர்தனவுடன் சோஷலிஸத் துரோகியான என். எம். பெரேராவும் சேர்ந்து அன்று பிரதமராயிருந்த டட்லி சேனநாயக்காவை பேட்டி காணச்சென்றது நாடறிந்த விஷயம்.

ஆஸ்பத்திரிக்கோ அல்லது வேறு அவசர வேலைகளுக்கோ செல்ல வேண்டுமானால் பொதுமக்கள் ரயிலிலும், பஸ்ஸிலும் வௌவால்களைப் போல் தொங்கிக்கொண்டு பிரயாணம் செய்ய வேண்டிய அவல நிலையிலிருக்கிறார்கள். பாராளுமன்ற அங்கத்தவர்கள் இன்று மாட்டு வண்டிகளில் செல்கிறார்களா, அல்லது சைக்கிளில் செல்கிறார்களா? அவர்களிடம் கார்கள் இல்லையா?

எம். பி. மார்களுக்கு புதிய கார்கள் வாங்குவதற்கு அரசாங்கம் கடன் கொடுத்தால், அதைத் தான் ஆதரிப்பதாக ஜே. ஆர். கூறியிருக்கிறார். இக் கடனை மாத தவணையில் திருப்பிக் கொடுப்பதற்கு வகை செய்ய வேண்டும் என்று தகநாயக்கா கேட்டிருக்கிறார்.

புதிய கார் விஷயத்தில் அரசாங்க உறுப்பினர்களுக்கும் எதிர்க் கட்சியினருக்கும் எவ்வளவு ஒற்றுமை!

எம். பி. மார்களுக்குப் புதிய கார்கள் கொடுப்பதற்குப் பதிலாக ஹெலிக் கொப்டர் விமானங்கள் வாங்க ''மக்கள் அரசாங்கம்'' வழிசெய்தால் இன்னும் விசேஷமாயிருக்கும்!

★

## மாணவர் போராட்டம்

பேராதனையில் பல்கலைக் கழக பொறியியல் தேர்வில் நடந்த தில்லுமுல்லுகள் என்ன? தமிழ் மாணவர்கள் கூடுதலாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறி ஒரு அபயவிக்கிரமா கொமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் கமிட்டி, தெரிவு முறையாக நடைபெற்றுள்ளது என தீர்மானித்துள்ளது. ஆனால் இறுதியில் மந்திரிமார் விருப்படிதான் மாணர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அநீதி நடந்தால் மந்திரிப் பதவியிலிருந்து விலகி விடுவேன் என்று வடக்கில் வீரம் பேசிய மந்திரியார் தந்தி வேகத்தில் செயல்படுகிறாரோ தெரியவில்லை.

அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் எதிராக உலகெங்கும் மாணவர்கள் போராட்டக் கொடியை உயர்த்தியுள்ளார்கள். இலங்கை மாணவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. கட்டுப்பொத்தை மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக அம்பாறை மாணவர்களும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். இரியகொல்லைக்கும், யு. என். பிக்கும் எதிராகப் போராடிய மாணவர்கள் பதியுதீனுக்கும், முக்கூட்டரசாங்கத்திற்கும் எதிராகப் போராடத் துணிந்துவிட்டார்கள்.

### முக்கிய உண்மை

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் சில முக்கிய உண்மைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும். இரியகொல்லைக்கும், யு. என். பி.க்கும் எதிராகப் போராடிய மாணவர்களைத் தாக்கிய அதே பொலிஸ்தான் இன்று பதியுதீனுக்கும் முக் கூட்டரசாங்கத்திற்கும், எதிராகப் போராடிய கட்டுப் பொத்தை மாணவர்களையும் தாக்கியுள்ளது. ஆட்கள் மாறினாலும் அடக்குமுறையும், அரசு இயந்திரமும் மாறவில்லை. இரியகொல்லைக்கும், பதியுதீனுக்கும் எதிராக நடத்திய, நடக்கின்ற போராட்டங்கள் அரசு இயந்திரத்திற்காக நடத்த வேண்டிய கட்டத்தை நெருங்குகிறது. மாணவர்கள் இதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

## போப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

வத்திக்கானிலுள்ள அர்ச். பீட்டர்ஸ் சதுக்கத்தில் தமது வழமையான ஞாயிறு பிரசங்கத்திற்காக தேவாலயத்தின் மேல் மாடி ஜன்னலில் போப் காட்சியளித்ததும், வீடில்லாத நூற்றுக்கணக்கான சேரிவாழ் மக்கள் போப்புக்கு எதிராக கோஷங்களைக்கோஷித்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

ரோம் நகருக்கு வெளியிலுள்ள சேரிகளில் வாழும் நூற்றுக் கணக்கான ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

## மேதின ஊர்வல வழக்கில் தோழர்கள் விடுதலை

1969ம் ஆண்டு, மே தினத்தை மேதினத்தன்றே கொண்டாட வேண்டும் என்ற முடிவின்படி, யாழ்ப்பாணத்தில் மேதின ஊர்வலமும் கூட்டமும் நடந்ததும், பொலிஸாருக்கும், புரட்சிகர உணர்வுடன் வந்த ஊர்வலத்தினருக்கும் இடையில் மோதல் நடந்ததும் தெரிந்ததே. இச் சம்பவத்தில், சட்ட விரோதமாக ஊர்வலம் நடத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தோழர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், கே. செந்திவேல் உட்பட ஏழுபேர்மீது பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நடந்த விசாரணையில் தோழர்கள் அனைவரும் விடுதலை செய்யப் பட்டனர்.

# எமக்கு வழிகாட்டும் தோட்டம

மகத்தான மாசேதுங் சிந்தனையை இடத்திற்கேற்ப, இடத்தின் நிலைக்கேற்ப பிரயோகம் செய்வதால் மனிதனால் செய்ய முடியாதது ஒன்றுமே இல்லை என்பதை சீன மக்கள் நிரூபித்து வருகிறார்கள். கடந்த இருபது வருடங்களாக அவர்கள் ஒவ்வொரு துறையிலும் அடைந்துவரும் வெற்றிகள் இதற்கு சான்று பகருகிறது. விடுதலை செய்யப்பட்டபோது உலகத்திலேயே பிச்சைக்கார நாடாக இருந்த சீனம் இன்று அந்தஸ்தானத்தை வேறு நாடுகளுக்கு அளித்துவிட்டு எவருக்கும், கடன் இல்லாத நாடாக பரிமளிக்கிறது.

இந்த காலகட்டத்தில் முதலாளித்துவ நாடுகளில் வாழும் நம் நிலை என்ன? தலைவர் மாஓவின் சிந்தனையின் பலன்களை நாமும் அடைய வழியென்ன? தலைவர் மாஓவின் கருத்துக்களை பாட்டாளிகள், விவசாயிகள், உழைக்கும் புத்திஜீவிகள் மத்தியில் பரப்புவது நமது தலையாய கடமை. இவ் விஷயங்களில் நமக்கு வழிகாட்டியாக அமைகிறார்கள் நான் அண்மையில் சந்தித்த ஒரு தோட்டத்தின் தொழிலாளர்கள்.

இந்த தோட்டத்தை சேர்ந்த கல்வி கற்ற தோழரான ஒருவரைக் கண்டேன். இவர் முன்பு தொழிலாளர்களுக்கு (டியுஷன்) பாடங்கள் சொல்லி கொடுத்து அதில் ஒரு வருவாயையும் பெற்று வந்தார். ஆனால் தலைவர் மாஓவின் ''மக்களுக்கு சேவை செய்யுங்கள்'' என்ற கட்டுரையை வாசித்த பின்பு பாட்டாளி மக்களுக்கு பள்ளி பாடங்களைவிட மாஓ சிந்தனையே பயனளிக்கக் கூடியது என்பதை உணர்ந்து மாஓ சிந்தனைகளைப் பற்றிய விளக்க வகுப்புக்களை நடத்தத் தொடங்கினார்.

இவரின் வகுப்புகள் மிகவும் விசேஷமும், சுவையும் வாய்ந்தவையாகவும் விளங்குகின்றன. காலையில் கல்வி கூடங்களுக்கு சென்று வரும் மாணவ-மாணவிகளுக்கு அவர்கள் அன்று பள்ளியில் கற்றவை எப்படி ஏழையின் வாழ்க்கைக்கு சம்பந்தமற்றவையாக இருக்கின்றன என்பதையும் முதலாளித்துவ அரசுக்கு சாதகமாக இவை அமைகின்றன என்பதையும் காட்டுகிறார்.

இந்த வகுப்புகள் நடத்துவதற்கு ஆரம்ப காலத்தில் கடுமையான எதிர்ப்புகள் இருந்தன. பல பெற்றோர் இவ் வகுப்புகளைப் பற்றித் தவறாக எண்ணிக்கொண்டு தம் பிள்ளைகளை அனுப்ப மறுத்தார்கள். ஆனால் இவர் இவ் வகுப்புகளைப் பற்றி பொறுமையோடு பெற்றோருக்கு விளக்கம் கொடுத்தார். அதன் பின்னர் பெற்றோரின் ஆசீர்வாதத்தோடு வகுப்பை நடத்தத் தொடங்கினார்.

இந்த தோட்டத்தில் நாம் காணும் ஒற்றுமையை எண்ண எண்ண மனதிற்கு மகிழ்ச்சியே ஏற்படுகிறது. ஒருவரை ஒருவர் தோழர் அல்லது தோழி என்றே அழைக்கிறார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, குற்றங்களை மன்னித்து ஒரே தாயின் புதல்வர்கள் போல வாழ்கிறார்கள். இங்கு பேசத்தெரிந்த அனைவருக்கும் மாஓவின் மேற்கோள்கள் தெரியும். அவற்றை அவர்கள் தம் வாழ்வில் பிரயோகிப்பதால் இத்துணை பலன்களை அடைகிறார்கள்.

''மக்களுக்கு முழு மனதுடன் சேவை செய்வது'' என்ற கருத்து ஆழமாக பதிந்து தொழிலாளிகளிடையே பதவிகளுக்கோ, பெயருக்கோ அடிமையாகாத நிலையைக் காணலாம். இதன் தலைவர்கள் மாற்றப்படும் போது அந்த தலைவர்கள் கட்சியைப் பற்றி தூற்றித் திரிவதோ, வேறு கட்சியை அமைக்க முயற்சிப்பதோ கிடையாது. மாறாக ''என்னைவிட வேறு ஒருவர் இந்த தொழிலாளருக்கு சேவை செய்ய முடியுமானால் அவர் செய்யட்டும். அதற்கு நம் ஒத்துழைப்பை தருவோம்'' என்று கூறுவதோடு நில்லாது. நிச்சயமாக தருகிறார்கள். தலைவர்கள் மும்முறை மாற்றப்பட்டபோதும் இதே ஒத்துழைப்பு கிடைத்துள்ளது.

சினிமா அல்லது இசைத் தட்டுகள் மூலம் புதிய புதிய பாடல்கள் வெளியாகிறது. இவற்றை பாட இளைஞர்கள் ஆர்வம் கொள்வதை பல முன்னேறிய தோழர்கள் கண்டார்கள். இப்படி வெளிவரும் பாடல்களின் ஆபாச கருத்துக்கள், முதலாளித்துவப் போதனைகள் மக்களிடையே பரவுவதை தடுக்க நல்லதோர் முடிவுக்கு வந்தார்கள். புதிதாக ஒரு பாடல் வெளிவந்தவுடனேயே அதே மெட்டுடன் நல்ல கருத்துக்களுடனும், பாட்டாளி வர்க்க வழியிலும் அமைந்த பாடல்களை உடனே எழுதத் தொடங்கினார்கள். இதனால் பல புதிய கவிஞர்களும், புதிய பாட்டாளி வர்க்கப் பாடல்களும் தோன்றி உள்ளன.

இப்படி தாம் எழுதிய பாடல்கள் அடைந்து வரும் வெற்றியை அடுத்து தொழிலாளிகள் தெம்மாங்கு, கும்மி, உடுக்கு பாட்டு என்ற மெட்டுகளில் பல பாடல்களை எழுதி உள்ளனர். இதே போல பல நாடகங்களும் தோன்றி உள்ளன. அண்மையில் எழுந்த நாடகம் கட்டபொம்மனும் ஜாக்சன் துரை நாடகத்தை இன்றைய நிலையோடு தழுவி எழுதிய 'சண்முகதாசனும் சமர்வில் துரையும்' என்ற நாடகமாகும். அதே போல சிறுவர், சிறுமியருக்கும் புரட்சிகர கோஷங்கள் பாடல்கள் என்பன இப்போதே பழக்கப்பட்டு வருகிறது. இதனால் இந்த இளம் சிரார்களிடம் கூட பெரும் புரட்சிகர உணர்வை காண முடிகிறது.

வாரமொருமுறை உள்ள விடுமுறை தினத்தை இவர்கள் படம் பார்த்து கழிக்காது கலந்து உரையாடி பலனுள்ள வகையில் கழிக்கிறார்கள். இத் தினத்தில் குற்றங்கள் அல்லது வழிதவறி நடந்தவர்கள்மீது விமரிசனமும், பொதுப் பிரச்சினைகள் குறித்து கலந்து உரையாடல் என்பனவும் நடைபெறுகின்றன.

இவை அனைத்தையும் காணும் போது நிச்சயமாக இந்த தோட்ட தொழிலாளர்கள் மற்ற அனைவருக்கும் ஒரு உதாரணமாக அமைந்து உள்ளதை காண முடிகிறது. அவர்கள் காட்டும் வழி பாட்டாளி வர்க்க அரசு ஏற்படக்கூடிய வழி. இதை நாமும் உணர்ந்து அவர்கள் வழியில் நடப்போமாக.

—செந்தி

## மக்கள் யுத்தம்

மக்கள் யுத்தத்தின் தந்திரம் — எதிரியை
மாய்க்கும் ஒப்பற்ற மந்திரம்
சிக்கல் இல்லாத சாத்திரம் — சிந்தனை
சிக்கல் நீக்கிடும் சூத்திரம்

மாசேதுங் தந்திட்ட தந்திரம் — புரட்சியில்
மக்கள் முன்னேறும் எந்திரம்
காசேதும் இல்லாமல் கொள்ளலாம் — எந்த
காயிதப் புலியையும் பொள்ளலாம்

மக்களை ஒன்றெனக் கூட்டுவோம் — எதிரியை
மடக்கத் திட்டங்கள் தீட்டுவோம்
மக்கள் பொங்கி எழுந்திடுவார் — அவரை
வாயில் போட்டு விழுங்கிடுவார்

உண்டிகள் பானம் விற்றிடுவார் — சிறுவர்
உளவுகள் தேடிச் சுற்றிடுவார்
மண்டுகள் பறிக்க மிஞ்சிடுவார் — அவர்கள்
மயக்கம் பார்த்து நஞ்சிடுவார்

வாகனம் ஓடும் வீதிகளில் — வாலிபர்
மறைந்து தாக்குவர் பாதைகளில்
மோகன மின்னல் கோதையர்கள் — சமரில்
முன்னின் றுழைக்கும் தாதியர்கள்

நாட்டில் கழனிப் பயிரெடுப்பார் — இரவில்
நாடும் பகைவர் உயிரெடுப்பார்
கோட்டைகள் எறியும் தீரர்கள் — நமது
கொரில்லா படையின் வீரர்கள்

தரையில் குண்டுகள் புதைத்திடுவார் — பகைவர்
தாக்குதல் தொடுத்தால் சிதைத்திடுவார்
விரைவில் பறக்கும் வண்டிகளை — வெடிக்க
வீசுவர் பலகைக் குண்டுகளை

ஊர்ந்து வந்திடும் டாங்கிகளாம் — பாங்கில்
ஓடித் தகர்ப்பர் பாங்கிகளாம்
சேர்ந்து தெவ்வரைத் தீயிடுவார் — சிறிது
தெரிந்தால் மெல்லப் போயிடுவார்

திடீரெனப் பாய்ந்து தாக்கிடுவார் — எதிரிகள்
திரும்பு முன்னுயிர் போக்கிடுவார்
படீரெனக் குண்டு வெடித்திடுமே — எதிரிப்
படையின் பாசறை குடித்திடுமே

கம்பும் கதையும் ஏந்திடுவார் — எதிரியின்
காவல் கிடங்குகள் போந்திடுவார்
அம்பின் வேகத்தில் ஒறுத்திடுவார் — எதிரியின்
ஆயுதம் எல்லாம் பறித்திடுவார்

முடிந்தால் எதிரியை நடுங்கவைப்பார் — தமக்கு
முடியா விட்டால் ஒடுங்கி நிற்பார்
மடிந்தால் மக்களின் சேவைக்கு — இன்னும்
மாய்ந்தால் புரட்சியின் தேவைக்கு

வெகுஜன வேலையில் பிரிந்து செல்வார் — எதிரியை
வீழ்த்திட என்றும் நெரிந்து செல்வார்
வெகுஜனம் எங்கள் பவுத்திரம் — அவர் நம்
எதிரியை விழுங்கும் சமுத்திரம்

ஆயுதம் ஏந்திய மக்களடா — அங்கே
ஆரும் செல்வது சிக்கலடா
காயிதப் புலிகள் எதிரிகளே — அவர்க்கு
கைக் கூலிகளாம் உதிரிகளே

தாக்கும் போது பின்னிடுவோம் — முகாமில்
தங்கினால் போது துன்னிடுவோம்
வேர்க்கும் போது வாட்டிடுவோம் — ஓடில்
வேகம் கூட்டி வீட்டிடுவோம்.

வீட்டில் வெளியில் சோலையிலே — எதிரி
வீரர்கள் சரியும் சாலையிலே
காட்டில் தூங்கும் விடுதியிலே — குண்டுகள்
கதற வெடிக்கும் சடுதியிலே

ரோட்டில் செல்லவும் அஞ்சிடுவார் — எதிரிகள்
ரோந்து சுற்றியும் துஞ்சிடுவார்
நாட்டில் நடத்துவம் நித்தமடா — யாரும்
நடுங்கும் மக்கள் யுத்தமடா.

பாடியது: ''மலைக்குயில்''

## என். எம். சுய ரூபத்தைக் காட்டுகிறார்

அன்புள்ள தங்கைக்கு,

உன் கடிதம் கிடைத்தது, கிளுகலை தோட்டத்தில் நடந்த வீரமிக்க போராட்டத்தைக் குறித்து விபரமாக எழுதியிருந்தமைக்கு மிக்க நன்றி.

பாராளுமன்றத்தின் மூலம் தொழிலாளர் தம் உரிமைகள் எதையுமே பெற முடியாது என்பதற்கு இந்த போராட்டமும் ஒரு சான்றாக நிற்கின்றது. கொல்வின் ஆர். டி. சில்வா, என். எம். பெரேரா, பீட்டர் கெனமன், அசீஸ் முதலிய எத்தனையோ தொழிற் சங்கவாதிகள் இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள். ஆயினும் உரிமையை கேட்ட தொழிலாளிக்கு பரிசாக துப்பாக்கி குண்டுகளையே கொடுத்திருக்கிறார்கள்.

இதைக் கவனி, சமர்வில் என்ற சண்டாளன் ஏழைத் தொழிலாளிகளை துன்புறுத்திய போது எந்தப் பாராளுமன்ற அங்கத்தவரும் ஏன் என்று கேட்கவில்லை, அவன் அவர்களின் உரிமையை பறித்த போது ஒரு மந்திரியும் அவனை கண்டிக்கவில்லை. அவன் தொழிலாளிகளின் இலவச அரிசியை நிறுத்தி ஆயிரம் தொழிலாளரை கொல்ல நினைத்தபோது ''ஜனநாயக மக்கள் அரசு'' அவனை தடுக்கவில்லை. ஆனால் சமர்வில்லிடம் உரிமையை தொழிலாளர் கேட்டபோது நாய்களை சுட்டுத் தள்ளுவதுபோல தொழிலாளரை கொன்றது ''மக்கள் அரசாங்கத்''தின் பொலிஸ்படை. இது பாட்டாளிகளின் அரசாங்கமா இல்லை. முதலாளியின் அரசா? நீ சிந்தித்து முடிவு கூறு.

அசீஸின் சங்கத்தை சேர்ந்த இராமையா இறந்தவுடன் அவருக்கு சவப்பெட்டி கொடுத்தும், மற்றும் தமது சங்க தோழரான அழகர் சாமிக்கு செய்த அத்தனை உதவிகளையும் சங்க வேறுபாடு கருதாது செய்து செங்கொடி சங்கம் கடமையாற்றியது பற்றி எழுதி இருந்தாய். இது அதிசயமான ஒன்று அல்லவே! செங்கொடி சங்கம் பாட்டாளிகளின் தனிச் சங்கம். அது பாட்டாளி மகனுக்கு உதவி செய்யவில்லை என்றால் அதை அதிசயமான ஒன்றாக நான் கருதியிருப்பேன். பாட்டாளிகளின் சங்கம் என்பதால் தொழிலாளிக்கு உதவ முன் வந்த இந்த உணர்வுதான் பாட்டாளி வர்க்க உணர்வு எனப்படும்.

அதே சமயம் தொழிலாளிக்கு உதவி தேவைப்பட்ட நேரத்தில் எங்கோ போய் ஒளிந்து கொண்ட அசீஸ் சங்கவாதிகளை கவனித்தாயா? ஏன் ஒளிந்தார்கள்? விளக்கமாக கூறுகிறேன். அசீஸ் ஒரு முதலாளி. தோழர் இராமையா முதலாளிகளுக்கு விரோதமாகப் போராடியது அந்த முதலாளிக்கும், அந்த முதலாளியின்

8-ம் பக்கம் பார்க்க

# இந்தோனேஷிய பாசிஸ்ட் ராணுவ ஆட்சி

ஆபிரிக்க—ஆசிய பத்திரிகையாளன் என்னும் பத்திரிகை தனது சமீபத்திய ஒரு வெளியீட்டில் இந்தோனேஷியாவைச் சேர்ந்த குணவன் என்பவர் எழுதிய ஒரு கட்டுரை, இந்தோனேஷியா பாசிஸ்ட் ராணுவ ஆட்சி ஏகாதிபத்தியத்தின் ஒரு கருவி என வெளிப்படுத்தியுள்ளது. இந்தோனேஷிய மக்கள் சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமான தமது போராட்டத்தைக் கடைசிவரையில் கொண்டு செல்வார்கள் என அக் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

அக்கட்டுரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 40 ஆண்டுகளுக்கு முன்பு, அன்று சீனுவில் இருந்த பலவிதமான சிக்கல் நிறைந்த முரண்பாடுகளையும் சீர்தூக்கி ஆராய்ந்த பின்பு தலைவர் மாஓசேதுங் பின்வருமாறு சுட்டிக் காட்டினார்: ''இந்த முரண்பாடுகளை நாம் சரியான முறையில் விளங்கிக்கொண்டவுடன், சீனு எவ்வளவு அந்நரமான நிலையில், எவ்வளவு குழப்பமான நிலையில் இருக்கிறதென்பதை நாம் கண்டுகொள்வோம். ஏகாதிபத்தியத்திற்கும், போர்விரும்பிகளுக்கும்; நிலப்பிரபுக்களுக்கும் எதிராக கிளர்ந்தெழக்கூடிய புரட்சி தவிர்க்கமுடியாததும், நிச்சயம் விரைவில் வந்தே தீரும் என்பதையும் கண்டு கொள்வோம். சீனு முழுவதும் சிதறிக் கிடக்கும் காய்ந்த குச்சுக்கள் விரைவில் தீப்பற்றிக் கொள்ளும். 'ஒரேயொரு தீப்பொறி காட்டுத்தீயை உண்டாக்கும்' என்ற வாக்கியம் தற்போதைய நிலைமை எப்படி விரிவடையும் என்பதை விளக்குவதற்குச் சிறந்த உதாரணமாகும்.''

இன்று அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியத்தின் குரங்குப் பிடியில் சிக்கியிருக்கும் இந்தோனேஷிய நிலைக்கு அன்று தலைவர் மாஓ தொகுத்துரைத்த சீனுவின் நிலை அடிப்படையில் ஒத்துவரக்கூடியதாகும். இந்தோனேஷிய பாசிஸ்ட் ராணுவ ஆட்சி ஏகாதிபத்தியத்தின் ஒரு கருவி என்ற முறையில் முற்றுமுழுதாக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நவீன ரக காலனியாக மாறிவிட்டது என்பதைத் தவிர வேறு எதுவுமே இல்லை.

### மாயையிலிருந்து விடுபடுகிறார்கள்

இந்தோனேஷிய மக்கள் தங்களின் கடந்தகால கசப்பான அனுபவங்களின் மூலம் ''சமாதானப் பாதை'' என்ற மாயையிலிருந்து விடுபட்டு தெளிவு பெற்றிருக்கிறார்கள். அரசு சக்தியின் அடிப்படை முக்கியத்துவத்தில் வலுவான நம்பிக்கை கொண்டிருக்கும் அவர்கள், மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை அமைப்பதற்கு முன்னோடியாக, பாசிஸ ராணுவ ஆட்சியை இழுத்து விழுத்தி நாசமாக்குவதற்கென போராட்டத்தில் கிளர்ந்தெழுந்துள்ளார்கள். ஆண்டாண்டு காலமாக உண்மையான தேசிய சுதந்திரத்தையும், சமுதாய விடுதலையையும் அடைய வேண்டுமென அபிலாஷை கொண்டிருக்கும் இந்தோனேஷிய மக்களுக்கு இந்தப் பாதைதான் ஒரேயொரு வழியாகும்.

அக் கட்டுரையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது: சுகார்த்தோ பாசிஸ ராணுவ ஆட்சி மக்களின் மீதான தனது ஈவிரக்கமற்ற அடக்குமுறையை அதிகரித்த வண்ணம் இருக்கிறது. மக்களிடமிருந்து நேரடியாகவும் மறைமுகமாகவும் திணிக்கப்பட்ட அதியுயர்ந்த வரிகள் மூலம் 31,793 கோடி இந்தோனேஷிய ரூபாய்களைக் கறந்தெடுக்கத் தீர்மானித்துள்ளது. முழு செலவினங்களில் இது 70 சத வீதத்தைக் கொண்டதாகும். அமெரிக்க

கிராமப்புறங்களில் பெருந்தொகையான விவசாயிகள் தம்வசமிருக்கும் எல்லாவற்றையும் விற்கவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு ஆளாகியுள்ளார்கள். கிராமங்களிலிருந்து வெளியேறிய லட்சக்கணக்கானோர் நிர்க்கதியற்றவர்களாக நகரங்களில் அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜகார்தாவில் வெளியான பத்திரிகை அறிக்கையின்படி 30,000 பல்கலைக் கழகப் பட்டதாரிகளும், பல்லாயிரக்கணக்கான வெளியேற்றப்பட்டவர்களும் இடைத்தர பாடசாலைப் பட்டதாரிகளும் உட்பட சுமார் 40 லட்சம் பேர் வேலையற்றிருக்கிறார்கள். மற்றையோரில் ஒரு கோடி 30 லட்சம்

மான உயர்தர, நடுத்தர பதவிகளை வகிக்கும் ராணுவ பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது.

### ஏகாதிபத்திய பாதந்தாங்கி

299 அசல் பாராளுமன்ற அங்கத்தவர்களில் 57 பேர் களைந்து எறியப்பட்டுள்ளார்கள். ''பாராளுமன்ற''த்தின் மேல் கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதற்கென சுகார்த்தோவினுல் தன்னிச்சையாக ராணுவ அதிகாரிகள் உட்பட தன் ஆதரவாளர்களிடையே இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட 172 பேர் நியமனம் பெற்றுள்ளார்கள். இது போன்ற ரப்பர் முத்திரை

## ஏகாதிபத்தியத்தின் ஒரு கருவி

தலைமையிலான ஸ்தாபனங்களிலிருந்து 'உதவி' என்ற பெயரில் 12,431, கோடி இந்தோனேஷிய ரூபாயை அதன் 29 சதவீதமான செலவினங்களுக்கெனப் பெற இருக்கின்றது. உள்நாட்டில் அதிகரித்திருக்கும் மக்களைச் சுரண்டுதலோ அல்லது வெளிநாட்டு 'உதவி' என்ற பெயரில் ஏகாதிபத்தியவாதிகளிடம் பெறப்படும் பிச்சையோ இந்த ஆட்சியை நோக்கி விஸ்வரூபம் எடுக்கும் பிரச்சினைகளிலிருந்து தன்னை விடுவிக்க முடியாது. இதற்கு எதிர்மாருக நிலைமை முன்னில் பார்க்கச்சீரழிந்து வருகிறது.

### வரி சுமை கூடுகிறது

எப்பொழுதோ ஓட்டாண்டிகளாக ஆக்கப்பட்டுள்ள இந்தோனேஷிய மக்கள் 40 க்கும் அதிகமான வகையான உயர்ந்த வரியினுலும் நானுவித வசூல்களினுலும் முனகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியின் வெளிநாட்டுக் கடன் (1966ம் ஆண்டில் 220 கோடி அமெரிக்க டாலர்) 450 கோடி அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது. தள்ளாடிக்கொண்டிருக்கும் இந்த பாசிஸ்ட் ராணுவ ஆட்சியை முட்டுக்கொடுப்பதற்கென ஏகாதிபத்திய நிதி நிலையங்கள் இந் நிதி ஆண்டு வழங்கவென உறுதியளித்திருக்கும் 60 கோடி டாலர் 'உதவி'யும் இதில் அடங்கியுள்ளது.

சுகார்த்தோவும் அவனுக்குத் துணைபுரியும் பூர்ஷுவா ''நிபுணர்''களும் தங்களின் ''பணவீக்கத் தடுப்பு'' ''வெற்றி'' பற்றி புளுகத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனுல், புள்ளி விபரங்கள் இவற்றை முழுப் பொய் என்று காட்டியுள்ளன. பணவீக்கம் பொருமிக் கொண்டே போகின்றது. விநியோகத்திலிருக்கும் கடதாசிக் காசின் தொடர்ச்சியான அளவுக்கதிகமான விருத்தியும் ஆனுல் அதன் உண்மைப் பெறுமதியில் வீழ்ச்சியும் இவற்றை நிரூபிக்கின்றன.

வெளிநாட்டு உதவியில் நம்பிக்கை, வெளிநாட்டு ஏகபோக முதலுக்கு சேவை செய்யும் இறக்குமதிக் கொள்கை, ஆட்சியினர் வசூலிக்கும் சுமையான வரி ஆகியன எல்லாமாகச் சேர்ந்து தேசிய உற்பத்தியில் ஆகக் குறைந்தது ஐம்பது வீதத்தை வங்குரோத்தாக ஆக்கியுள்ளதோடு 30 வீதத்தை முடமாக்கிவிட்டு மிகுதியை மூச்சுவிட முடியாமல் திணற அடித்துள்ளது.

### வேலையில்லாத திண்டாட்டம் அதிகரிப்பு

இந்த நிலைமை வேலையில்லாப் பட்டாளத்தில் ஒரு பெரிய அதிகரிப்பை உண்டாக்கியுள்ளது.

பேர் கூலிகளாக நாளாந்த வேலைகளில் ஈடிபட்டிருக்கிறார்கள்.

மேற்கு ஜாவா, தென் ஜொக்ஜா, மத்திய ஜாவா, மேற்கு சுமாத்ரா உள்ளடங்கிய பல பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் பஞ்சம் காரணமாக பலர் உயிர் இழந்து கொண்டிருக்கிறார்கள்.

அமெரிக்க தனிநலன்களுக்கு ''அபாயகரமானவர்கள்'' எனக் கருதப்பட்டு அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனத்தினுல (சி. ஐ. ஏ.) தூண்டிவிடப்பட்டு நாட்டில் குடியிருக்கத் தகுதியற்றவர்கள் எனக் கொலைசெய்யப்பட்டவர்கள் பல லட்சக்கணக்கானோர் என்பது நன்கு தெரிந்த விஷயமாகும். இப்பொழுது பல ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகள் சிறைச்சாலைகளிலும் தடுப்புக் காவல் முகாம்களிலும் கிடந்து வாடி வதங்கிக் கொண்டிருக்கிறார்கள். மலேரியா நோய் பரவிக் கிடக்கும் நாட்டின் கிழக்குப் பகுதியில் இருக்கும் புரு என்னும் இடத்தில் சுமார் 5000 அரசியல் கைதிகள் மனித வாசனையே இன்றி அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். புரட்சிவாதிகளையும் கம்யூனிஸ்ட்டுகளையும் மந்தைகள் போல் கொலைசெய்த சுகார்த்தோ பாசிஸ்ட் ராணுவ ஆட்சி, இது போதாதென்று சமீபத்தில் 100க்கும் அதிக

''பாராளுமன்ற''த்தில் தான் இந்த பாசிஸ்ட் ராணுவ ஆட்சி, 1967ன் முற்பகுதியில் துரோகத்தனமான ''வெளிநாட்டு முதலீடு மசோதா'' என்ற சட்டத்தையும் வேறு பல பிற்போக்குச் சட்டங்களையும் உற்பத்தி செய்துள்ளது.

அமெரிக்க, ஜப்பானிய இன்னும் மற்றைய எஜமானர்களின் ஆணையின்கீழ், அமெரிக்க எஜமானின் ஏகாதிபத்திய ஆட்சி, ஆக்கிரமிப்பு யுத்தம் என்னும் விஸ்தரிப்புக் கொள்கைக்கு மேலும் சேவை செய்யும் முகமாக இந்த ஆட்சி ஆசியாவின் படுமோசமான பிற்போக்கு அரசாங்கங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. ஜகார்த்தாவில் கடந்த மே மாதம் கூட்டப்பட்ட கம்போடியா சம்பந்தப்பட்ட ''ஆசிய பசுபிக் நாடுகளின் உச்சி மகாநாடு'' சுட்டிக்காட்டக்கூடிய ஓர் உதாரணமாகும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுல் தனியாகத் தூண்டிவிடப்பட்டு இந்தோனேஷிய பாசிஸ்ட் ராணுவ ஆட்சியின் வெளிநாட்டு மந்திரி ஆதாம் மாலிக்கினுல், இம் மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டதாகும். மகாநாட்டை ஒழுங்கு செய்வதின் மூலமும், அதற்கு அதிதியாக இருப்பதன் மூலமும் இந்தோ-சீன விஸ்தரிப்பு யுத்தத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்குச் சேவைசெய்வதற்கு தன்

னல் முடியுமான அளவு செயல்பட்டது இந்த இந்தோனேஷிய பாசிஸ்ட் ராணுவ ஆட்சி. இந்த ஆட்சி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விஸ்வாசமுள்ள பாதந்தாங்கி என்பதை இந் நிகழ்ச்சி காட்டுவதோடு, தவிர்க்க முடியாத முறையில் அதனுடன் சேர்த்துப் புதைக்கப்படும் என்பதையும் விளக்குகிறது.

அக் கட்டுரை மேலும் கூறுவதாவது: சுகார்த்தோ—நாசுசன் எதிர்ப் புரட்சிகர ஆட்சியின் துரோகம் நிறைந்த கொள்கையும், அதன் ஈவிரக்கமற்ற அடக்குமுறையும் சுரண்டலும், தினமும் இந்தோனேஷிய மக்களின் உறுதியான எதிர்ப்பைக் கிளப்பிய வண்ணம் இருக்கின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் பாதந்தாங்கிகளுக்கும் எதிராக சக்திவாய்ந்த ஒரு புரட்சிப் புயல் தென் கிழக்கு ஆசிய, மத்திய கிழக்கு, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மற்றும் உலகின் ஏனைய பாகங்களிலெல்லாம் கிளம்பியிருக்கின்றது. இந்தோனேஷிய மக்கள் தாம் தனிமையாகப் போரிடவில்லை என்பதையும், பொது எதிரியான அமெரிக்காவின் தலைமையில் அமைந்த ஏகாதிபத்தியம், சோவியத் சமூக ஏகாதிபத்தியம், பிற்போக்கு ஆகியவற்றிற்கெதிராக இந்தோ—சீன, மத்திய கிழக்கு, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க மற்றும் ஏனைய தேசங்களினதும் பிரதேசங்களினதும் மக்கள் நடத்தும் வீரமிக்க போராட்டங்களினுல் தாம் பெருமளவு ஆர்வமூட்டப்படுகிறார்கள் என்பதையும் உணர்கிறார்கள். முன்னேற்றப் பாதையில் என்னென்ன தடைகள் ஏற்படுகின்றனவோ, அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது போராட்ட உணர்வினுலும் நம்பிக்கை நிறைவினுலும் பூரணப் படுத்தப்பட்டுள்ள இந்தோனேசிய மக்கள் சுதந்திரமும், விடுதலையும் கிடைக்கும் வரை தங்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்தியே தீருவார்கள். இந்தோனேஷியாவின் மேல் ஏகாதிபத்தியமும், பாசிஸ்ட் ஆட்சியும் சவாரி செய்யும் காலம் குறைந்துகொண்டே வருகின்றது. இந்தோனேஷிய மக்கள் நிச்சயமாக இறுதியில் வெற்றி பெற்றே தீருவார்கள்.

# "சாட்டை" வெளியீட்டு விழா

"பழைய நோட்டுக்கள் புது நோட்டுக்களாக மாறும் இவ் வேளையில், சாட்டை பழைய கருத்துக்களை அகற்றி புதிய கருத்துக்களை மக்களுக்கு வழங்கும் என நம்புகின்றேன்''

இவ்வாறு 29-10-70ல் நடந்த ''சாட்டை'' எனும் முற்போக்கு கலை, இலக்கிய மாத சஞ்சிகையின் வெளியீட்டு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய மு. கார்த்திகேசன் கூறினார்.

இவ்விழாவில் பேசிய சிறுகதை எழுத்தாளரான தோழர் கே. டானியல், ''கலை இலக்கிய பத்திரிகைகளில் அரசியல் கலக்கக் கூடாது என பலர் கூச்சலிடுகிறார்கள். ஆனுல், கலை, இலக்கியம் அரசியலுக்காகவே இருக்கிறது. வர்க்கம் கடந்த கலை இலக்கியம், அரசியலுக்கு அப்பாற்பட்ட கலை இலக்கியம் என்பதெல்லாம் பிற்போக்குச் சமூக, அரசியலைப் பாதுகாக்கும் தந்திரப் பிரச்சாரமாகும். இதில்யாரும் ஏமாந்துவிடக் கூடாது. அரசியலிலிருந்து பிறப்பதுதான் கலை, இலக்கியம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். புரட்சிகரமான, முற்போக்கான கலை இலக்கியங்களைப் படைத்து புதிய சமூகத்தின் பிறப்புக்கு வழி செய்ய வேண்டும். ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், சுரண்டல், சாதி ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு கலை இலக்கியமும் ஆயுதமாக வேண்டும், இத்தகைய கலை இலக்கியங்களுக்கான சஞ்சிகைகளும் தோன்றி வளரவேண்டும். இப்போது வந்துள்ள ''சாட்டை'' இந்த நோக்கத்தைச் செயல் படுத்த வேண்டும். மக்கள் ''சாட்டைக்கு'' வரவேற்பும், ஆதரவும் தருவார்கள் என்று நம்புகின்றேன்'' என்றார்.

செந்திவேல் பேசுகையில் இன்று, இலங்கையில் கலை இலக்கியம், பத்திரிகை என்ற பெயரால், மக்களுக்கு எந்த வகையிலும் உதவாது. அவர்களுக்குக் கேடுவிளைவிக்கின்ற குப்பைகள் தான் வெளிவருகின்றன. தரமான எதுவும் இன்று இல்லை. இச் சூழ்நிலையில் ''சாட்டை'' தோன்றியிருக்கிறது. இதனை சிறந்த ஒரு முற்போக்குக் கலை இலக்கிய சஞ்சிகையாக வளர்த்தெடுப்பதற்கு இதன் பொறுப்பாளர்கள் கவனம் எடுக்க வேண்டும்'' என்றார்.

''அந்தக்காலத்தில் நிலப்பிரபுக்களும் சாதிவெறியர்களும் கையிலே சாட்டை வைத்திருப்பார்கள் - ஒடுக்கப்பட்ட மக்களை அடக்குவதற்காக. ஆனுல் இந்த 'சாட்டை' சாதிவெறியர்களையும் பிற்போக்குவாதிகளையும் திருப்பி அடிக்கும் என நம்பலாம்'' என்று கூறினுர், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க தலைவர் எஸ். டி. என். நாகரத்தினம.

சாட்டை ஆசிரியர் தனது நன்றி உரையில் ''சாட்டை''யின் நோக்கத்தை எடுத்துக் கூறி, மக்கள் இதற்கு ஆதரவு தரவேண்டும என்றார்.

# சாதிவெறி அட்டகாசத்திற்கு வாலிபர் பலி

கடந்த வாரம் கரவெட்டிப் பகுதியில் சாதி வெறியர்கள் அப்பகுதியில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின்மேல் திடீர் தாக்குதல் தொடுத்து அப்பாவி மக்களை கொடுமைப்படுத்தியது மட்டுமல்ல, 21 வயது நிரம்பிய வாலிபரின் உயிரையும் பலி எடுத்துள்ளார்கள். சாதி வெறியர்களின் கேவலமான அடக்குமுறையும், கொடுமைகளும் இப்பகுதியில் இது முதல் நிகழ்ச்சியல்ல. கடந்த காலங்களில் எல்லாம் இக்கொடுமைகள் தொடர்ந்து வந்ததுபோல் இப்பொழுது மேலும் கூடியுள்ளன. சாதி வெறியர்கள் தமது அடக்கு முறைக்கு வழமையாக பொலிஸ் நிலையங்களையும் பொலிசாரையும் பாவிப்பது இன்று சகஜமாகிவிட்டது. கரவெட்டிப் பகுதியில் சாதிக் கலவரம் எனச் சொல்லி, நடுநிலைமை வகிப்பதுதான் எமது போக்கு, நாம் கடமையைத்தான் செய்கின்றோம் எனக் கூறும் பொலிஸார் சாதி வெறியர்களின் சந்தோஷங்களைப் பெற்று அவர்களது சிறந்த ஊழியர்களாக மாறி ஒடுக்கப்பட்ட மக்களைத் துன்புறுத்தி வருகின்றனர்.

கடந்த 12ம் திகதி சாதி வெறியர்கள் கரவெட்டிப் பகுதியில் மனித வேட்டைக்குச் சென்றனர். ஆனால் அவர்களது வேட்டையை அப்பகுதி வாலிபர்கள் ஐக்கியமாக நின்று தடுத்துக் கலைத்தனர். பிறகு சாதிவெறியர் பொலிஸாரையும் துணைக்கு அழைத்து வந்து தமது கைவரிசையைக் காட்டினர். பொலிஸார் பெண்களையும், வயோதிபர்களையும் கேவலமான முறையில் நடத்தினர்.

ஆனால் மக்களும், வாலிபர்களும் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஒரு நாள் பதில் கொடுத்தே தீருவது என்ற நம்பிக்கையுடன் சாதி அடக்கு முறைக்கு எதிராகப் போராட ஐக்கியப்பட்டுள்ளனர். கத்தியினால் குத்தப்பட்டு சாதி வெறிக்குப் பலியான கந்தவனம் எனும் அவ் வாலிபருக்கு பல பகுதி மக்களும் சென்று அஞ்சலி செலுத்தி ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பிரேத அடக்கத்திலும் கலந்துகொண்டு மரியாதை செலுத்தினர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஒரே மேடையில் இவர்கள் !

◎ 1-ம் பக்கத் தொடர்

வகுப்புவாத கட்சி மட்டுமல்ல. அதற்குத் தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஒருவித செல்வாக்குமில்லை. கடந்த தேர்தலின்போது சிங்கள மக்களிடையே வகுப்புவாதப் பிரச்சாரத்தைக் கிளப்புவதற்கு பிற்போக்கு சக்திகளுக்கு உதவியாக தி. மு. க. வும் வகுப்புவாதப் பிரச்சாரம் செய்தது. இச் சந்தர்ப்பத்தில் முதலாளித்துவப் பத்திரிகைகள் எவ்விதம் இலங்கையில் தி. மு. க. வின் செல்வாக்குப் பரவுகிறதென்றும், அது எத்தனை தொகுதிகளில் போட்டிப் போடப் போகிறதென்றும் கயிறு திரித்ததும் நினைவுக்கு வருகிறது. இறுதியில் ஒரு தொகுதியில் மட்டும் போட்டியிட்டுத் தன் வெறுமையைக் காட்டிக்கொண்டது. இன்று அது விஜயவீராவுக்கும். தம்புவுக்கும் உதவ முன்வந்துள்ளது. இக் கள்ளக் கூட்டின் பின்னால் உள்ள மர்மம் என்ன?

தி. மு. க. வகுப்புவாத கட்சியல்ல என்று திரு. பாலாதம்பு நற்சாட்சிப் பத்திரம் வழங்கியுள்ளாராம். தி.மு.க. வின் துணையுடன் தோட்டத் தொழிலாளர் மத்தியில் தானும் ஒரு தொழிற்சங்கம் அமைக்க பாலாதம்பு முயல்வதற்கும் இக் கூட்டத்தில் அவர் கலந்துகொண்டதற்கும் தொடர்பு இருப்பதுபோல் தெரிகிறது. இப் புதிய சங்கத்தின் பெயரும் புரட்சிகர தோட்டத் தொழிலாளர் சங்கம் என்று அமையலாம் என அறிய வருகிறது.

தொழிற் சங்க இயக்கத்தின் ஐக்கியத்துக்கு திரி வைக்க பாலாதம்பு எடுக்கும் இந்த சமீபகால முயற்சிகளைக் கண்டு நாம் அஞ்சவில்லை. ஏனெனில் அவருடைய இந்த முயற்சிகளை தொழிலாளர் வர்க்கம் நன்கு அறியும். உள்ளொன்று பேசியும், புறமொன்று செய்தும் வருகின்ற ஜனதா விமுக்தி தலைவருடைய அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தும் இக் கூட்டத்தைப் பற்றி பலரும் இகழ்ச்சியாகவும் குத்தலாகவும், விந்தையாகவும் பேசிக்கொள்கிறார்கள். ஜனதா விமுக்திப் பெரமுன ஒரு உண்மையான புரட்சிகர இயக்கம் என நம்பித் தவறான பாதையில் வழிநடத்தப்படுபவர்களுக்கு இது கண்திறப்பாக இருக்கட்டும்.

## முக்கிய அறிவிப்பு

அண்மைக் காலத்தில் அடிக்கடி தாளின் விலை கூடிய போதிலும் ''தொழிலாளி''யின் விலையில் மாற்றம் செய்யவில்லை. எனினும், பட்ஜெட்டுக்குப் பின் தாளின் விலையும், தபால் செலவினங்களும் அதிகரித்திருப்பதால் ''தொழிலாளி''யின் விலையில் 5 சதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் ''தொழிலாளி'' ஒரு இதழின் **விலை 15** சதம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி

◎ 6-ம் பக்கத் தொடர்

உரிமைகளை காக்க ஒரு கருவியாகவிளங்கும் அவரது தொழிற் சங்கத்திற்கும் பிடிக்கவில்லை. ஆகவே ஒரு தொழிலாளி தன் உயிரை தியாகம் செய்தது கூட தியாகமாக அவர்களுக்குத் தெரியவில்லை. எனவே, துச்சமாக வெறுத்து ஒதுக்கினார்கள். இதை ஒவ்வொரு தொழிலாளியும் மனதிற் கொள்ள வேண்டும்.

### அனுதாபம்

ஐக்கிய இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தின், வோக்கர் அன் கிறீக்கிளையின் நீண்டகால உறுப்பினரான தோழர் ஜோசப் ஏப்ரஹாம் அகால மரணமடைந்த செய்திகேட்டு எமது ஆழ்ந்த துக்கத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அவர் தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஐ. இ. தொ. ச.
வோக்கர் அன் கிறீக் கிளை
உறுப்பினர்கள்.

## என். எம். சுயரூபத்தை காட்டுகிறார்

தொண்டமானும், அசீஸும் ஏன் தொழிற் சங்க வேலையில் இறங்கினார்கள்? தொழிலாளிக்கு விடுதலை பெற்று தரவா? தொழிலாளரின் அரசை ஸ்தாபிக்கவா? இரண்டுமே இல்லை. அவர்கள் இருவரினதும், அவர்களைப் போன்ற மற்ற முதலாளிகளின் சொத்துக்களையும், உரிமைகளையும் பாதுகாக்க தொழிலாளரை ஒரு கருவியாக பயன்படுத்தவே.

கம்யூனிஸம் பேசும் அனைவருமே கம்யூனிஸவாதிகளாக இருக்க முடியுமா? ஒருபோதும் முடியாது. சொல்லால் சோஷலிஸமும், செயலால் ஏகாதிபத்தியமும் என்று லெனின் கூறியதற்கு உதாரணமாகத் திகழுகிறார்கள் என். எம். பெரேரா, அசீஸ், போன்றோர்.

தோட்டங்களை தேசியமயமாக்குவோம், உலக வங்கி ஏகாதிபத்தியத்தின் ஆயுதம் என்றெல்லாம் தேர்தல் காலத்தில் முழங்கிய அதே என். எம். பெரேரா இன்று என்ன கூறுகிறார். தோட்டங்கள் தேசியமயமாக்கப்படாது என்று தெளிவாக உறுதியுடன் கூறுகிறார். உலக வங்கியிடம் பிச்சை வாங்க போய் வந்தார்.

ஏன் இப்படி இருவிதமாகப் பேசவேண்டும்? பொய்கள் கூறி மக்களை ஏமாற்ற வேண்டும் என்று யோசிக்கிறாயா? என். எம். ஒரு முதலாளி. அவர் முதலாளித்துவ உரிமைகளைப் பாதுகாக்க பாராளுமன்றத்துக்குள் நுழைந்தார். அப்படி நுழைய பாமர மக்களின் உதவி தேவைப்பட்டது. ஆகவே, அவர்களின் உதவியைப்பெற, தான் ஒரு சோஷலிஸவாதி போல வேஷமிட்டு நாடகமாடினார். இன்று பாராளுமன்றத்துக்குள் நுழைந்த பின்பு தன் சுயரூபத்தை வெளிக்காட்டுகிறார்.

போரிடத் துணிவீர்!
வெல்லத் துணிவீர்!

புரட்சியின் வணக்கங்களோடு
அன்பு அக்கா
வடிவு

## தலையங்கம்

### கட்டுப்பெத்த

மாணவர், வாலிபர்களின் அமைதியின்மை யு. என். பி. அரசாங்கத்தின் வீழ்ச்சியுடன் மறைந்து விடும் என்று எண்ணியவர்கள் சிலர் இருக்கின்றனர். நாம் அப்படி எண்ணவில்லை. மாறாக, மோசமாகிவரும் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் இந்த நிலைமை மேலும் மோசமாகும் என் நாம் எச்சரித்திருந்தோம்.

நமது எச்சரிக்கை சரியானது என்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டு விட்டது. புதிய அரசாங்கத்தின் முதல் ஆறுமாத காலத்துக்குள் மாணவர்களின் வகுப்பு பகிஷ்காரம் காரணமாக இரண்டு உயர்தரக் கல்வி நிலையங்கள் மூடப்பட்டன. ஏறக்குறைய எல்லா பல்கலைக்கழகங்களின் புதுப் பிரவேசங்களும் ஒத்திவைக்கப்பட்டன. பொலிஸார் கட்டுப்பெத்த மாணவர் மீது குண்டாந்தடிப் பிரயோகம் செய்து கண்ணீர்ப் புகையும் பிரயோகித்தனர்.

இதில் மோசமானதென்னவென்றால் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சாதகமாக பல்கலைக்கழகத்தின் பிரவேசத்திற்குத் தேவையாக இதுவரை காலமும் இருந்துவந்த தகைமைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டதாக வெட்கக்கேடான வதந்திகள் நடமாடுவதாகும். பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவும் போக்கில் கல்வி அமைச்சர் புள்ளிகளைத் தரப்படுத்தும் முறையொன்றைப் புகுத்தினார். இந்த முறைபற்றி எவருக்குமே தெளிவாகப் புரியவில்லைபோல் தெரிகிறது.

மாணவர், அமைதியின்மையும் வகுப்பு பகிஷ்காரமும்தான் இதனால் ஏற்பட்ட விளைவுகளாகும். பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பெற்றோர்—ஆசிரியர் சங்கங்கள் ஆகியவற்றால் ஆழ்ந்த அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில், அரசாங்கம் இதற்குரிய திருப்தியான ஒரு விளக்கத்தையோ, அல்லது ஒரு தீர்வையோ கொடுக்கவில்லை. பாடநிறுத்தத்திலிருந்த கட்டுப்பெத்த மாணவர்களை பொலிஸார் மிலேச்சத்தனமாகவும், மிருகத்தனமாகவும் முற்றிலும் சகித்துக் கொள்ள முடியாதவாறும் தாக்கியது மேலும் ஆத்திரத்தைக் கிளப்பியுள்ளது. அதேவேளையில், கட்டுப்பெத்த மாணவர்களுக்கு ஆதரவாக வகுப்புகளை பகிஷ்கரித்து நின்ற அம்பாறை தொழில் நுட்ப மாணவர்களுக்கெதிரான பொலிஸ் நடவடிக்கை இந்த கோபத் தீக்கு மேலும் எண்ணெய் வார்த்துள்ளது.

இந்தப் பொலிஸை அழைத்தவர்கள் யார்? ஏன் அழைத்தார்கள்? பொறுப்புள்ள எந்த அரசாங்க உறுப்பினரும் இந்தப் பொலிஸ் நடவடிக்கையை கண்டிக்காததைப் பார்க்கும் பொழுது இது அக் கல்லூரி அதிகாரிகளின் தூண்டுதலின் பேரில் நடந்துள்ளது என நாம் சந்தேகிக்கின்றோம். யு. என். பி. ஆட்சியிலாயிருந்தாலும் சரி, அல்லது கூட்டரசாங்கத்தின் கீழாயிருந்தாலும் சரி அரசு இயந்திரம் என்பது மக்களுக்கு எதிராகவே இயங்குகின்றது என்ற எமது கருத்து முற்றிலும் சரியானது என்பது மீண்டும் ஒரு தடவை தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பெத்த, அம்பாறை மாணவர்களுக்கு எதிரான பொலிஸாரின் கெடுபிடி நடவடிக்கையை எவ்வித தயக்கமுமின்றிக் கண்டித்து, இதற்கான பொறுப்புதாரி அரசாங்கமே என்றுகூறி, இக் கல்லூரிகளை உடனடியாகத் திறக்க வேண்டும், மாணவர்களின் நீதியான கோரிக்கைகளை உடனடியாக வழங்க வேண்டும் என்று கோரும் அதேவேளையில், இந்தச் சம்பவங்களிலிருந்து சரியான பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களுக்கும் வாலிபர்களுக்கும் நாம் அறைகூவல் விடுக்கின்றோம்.

உயர்தரக் கல்வி நிலையங்களின் பிரவேசத்திற்காக எண்ணிலடங்காத மாணவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரவேசம் பெற்று பட்டதாரிகளாக வெளியே வரும் 'அதிர்ஷ்ட' சாலிகளுக்குக் கூட போதிய வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் விட்டுச் சென்ற இது காலமும் எவ்வித மாற்றமும் அடையாமல் இருக்கின்ற—தேய்ந்து வரும் அரை காலனித்துவ தோட்டப் பொருளாதாரத்தின் இயற்கையான—விளைவுதான் இன்று நாம் காணும் வேலையில்லாத் திண்டாட்டம். இந்தப் பொருளாதார கட்டுக்கோப்பையும், இதற்கு காவல் நாயாக வேலைசெய்யும் பூர்ஷுவா அடக்குமுறை அரசு இயந்திரத்தையும் தகர்த்தெறியாமல் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது; மாணவர், வாலிபருக்கோ, தொழிலாளர் விவசாயிகளுக்கோ எவ்வித விமோசனமும் கிடையாது. எனவேதான், மாணவர்களும், வாலிபர்களும், தொழிலாளர்கள், விவசாயிகளுடன் ஐக்கியப்படும் தேவையை உணர்ந்து கொள்ள வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்; சமுதாயத்தில் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு புரட்சிகர நடவடிக்கையின் அவசியத்தை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு செய்தால்தான் மாணவர்கள், வாலிபர்களின் பிரச்சினைகளுக்கும், அதுபோல பொதுமக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடியும்.

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2